# *பார்வைக்கு ....*


சஞ்சிகை : இளவேனில்

முன்றாம் பதிப்பு : 19 தை 2013

வெளியிடுவோர் : கேசி தமிழ் மன்றம்

வடிவமைப்பு : ஆசிரியர் குழு

அச்சுப்பதிப்பு : யுனி ஆட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் இலங்கை



தொடர்புகட்கு : கேசி தமிழ் மன்றம்
PO Box 2516,
Fountain Gate, Vic - 3805,
Australia


## பொருளடக்கம்


| ஆக்கம் | பக்கம் |
|---|---|
| ❒ தொகுப்புரை | 02 |
| ❒ தலைவரின் உள்ளத்திலிருந்து..... | 03 |
| ❒ தமிழ் புத்தாண்டு | 04 |
| ❒ பருத்தித்துறை ஊராம் | 07 |
| ❒ நான் விரும்பும் காலம் | 08 |
| ❒ குமரிக்கண்டமும் சங்கங்களும் | 09 |
| ❒ இங்கிலிஷ் வாத்தியாரின் தமிழ்க் கடிதம் | 10 |
| ❒ அன்பென்றாலே அம்மா | 12 |
| ❒ தமிழ் அடையாளம் | 13 |
| ❒ ஆறு (தொடர் கதை) | 15 |
| ❒ கல்விச் சுற்றுலா | 17 |
| ❒ நேர்காணல் | 18 |
| ❒ மதிப்பிற்குரிய தொலைக்காட்சி நிறுவனத்தினருக்கு, | 20 |
| ❒ தைப்பொங்கல் | 23 |
| ❒ பரதநாட்டியம் | 24 |
| ❒ விடியலுக்கு இல்லை தூரம் | 25 |
| ❒ என் சிங்கப்பூர் கல்விச் சுற்றுலா | 26 |
| ❒ உடல் மனம் வாழ்க்கை | 28 |
| ❒ நான் சென்ற சுற்றுலா எவ்வாறு என்னை மாற்றியது | 33 |
| ❒ செந்தமிழ் படி | 34 |

# இளவேனில் 3

## வணக்கம்...

கேசி தமிழ் மன்றத்தின் இளவேனில் சஞ்சிகை - 3 இப்போது உங்கள் கைகளில் தவழ்கிறது.

அவுஸ்திரேலியாவில் ஆரோக்கியமான தமிழ் வளர்ச்சிக்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் இளையோரின் எழுத்தாற்றலை ஊக்குவிக்க வேண்டும் என்ற அவாவிலும் தொடங்கப் பட்ட இளவேனில் சஞ்சிகை அதன் நோக்கத்தை நிறைவாக்க கடுமையாக உழைத்துக் கொண்டிருக்கிறது.

எமது இந்த முயற்சிக்கு படைப்பாளிகளிடமிருந்து கிடைக்கும் பங்களிப்பு மிகவும் குறைவாகவே இருக்கிறது.

இளம் ஆக்கப் படைப்பாளிக்கும், இலை மறைகாயாக எழுதிக் கொண்டிருக்கும் படைப்பாளிக்கும். உங்கள் ஆக்கங்கள் இளவேனில் சஞ்சிகையில் பிரசுரிப்பதற்கு ஏற்ற வகையில் காலக்கிரமத்தில் கிடைக்கும் வண்ணம் தந்துதவ வேண்டுகிறோம்.

அரையாண்டு சஞ்சிகையாக வெளிவரும் இளவேனில் நிலையான அழகோடும், கனதியான ஆக்கங்களுடனும் இனிவரும் காலங்களில் வெளிவரப் படைப்பாளிகளின் ஒத்துழைப்பு மிகமிக அவசியமானது.

இதனைக் கருத்தில் கொண்டு கால வேகத்தின் ஓட்டத்தில் கலையும் இலக்கியமும் ஒன்றாகிப் பயணிப்போம்.

இளவேனில் வாசகர்கள் அனைவருக்கும் எமது தைத்திருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

நன்றி

**ஆசிரியர் குழு**



# தலைவரின் உள்ளத்திலிருந்து...

2012 ம் ஆண்டு தைத்திருநாளில் மொட்டவிழ்ந்து, ஆடிப்பிறப்பில் இரண்டாவது இதழ் விரித்து இன்று 2013 தைத்திங்களில் மூன்றாவது இதழாக மணம் பரப்பும் கேசி தமிழ் மன்றத்தின் இளவேனில் சஞ்சிகையை வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகிறேன். சிறுவர்களின் எழுத்தாற்றலையும் தமிழில் வாசிக்கும் எண்ணத்தையும் ஊக்குவிக்க வேண்டும் எனும் கருப்பொருளை உருப்பெறத் திகழவைக்கும் நோக்கோடு சிறுவர் இதழாக உதயமான இளவேனில், இன்று அனைத்துத் தரப்பினரையும் கவரும் வண்ணம் சிறுவர், மாணவர், வளர்ந்து வரும் இளம் எழுத்தாளர் மற்றும் அனுபவம் வாய்ந்த மூத்த எழுத்தாளர் ஆகியோரின் ஆக்கங்களைத் தாங்கி வெளிவந்திருப்பது வரவேற்கத்தக்கது. விரல் விட்டு எண்ணக்கூடிய ஓரிரு சஞ்சிகைகளே இத்தகைய பங்களிப்பைப் புலம்பெயர் தமிழ் சமுதாயத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கும் இன்றைய காலத்தில், காலத்தின் தேவை கருதி இளவேனில் வெளிவருவது மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகின்றது.

உதயமாகி இரண்டு அகவைகள் நிறைவு பெற்றிருக்கும் கேசி தமிழ் மன்றம், மிகக் குறுகிய காலத்தில் தமிழ் மக்களினதும் பல்லின கலாசார சமூகத்தினரதும் நன்மதிப்பைப் பெற்று நல்லதொரு சமூக நிறுவனமாக வளர்ச்சி கண்டிருக்கிறது. தமிழர் தம் விழாக்களான தைப்பொங்கல், ஆடிப்பிறப்பு ஆகிய விழாக்களின் மகத்துவத்தையும், அவற்றிலே புதைந்திருக்கும் கலாசார விழுமியங்களையும் வருங்கால இளம் சந்ததியினர் விளங்கிக் கொள்ளும் நோக்குடன் பாரம்பரிய கலை நிகழ்வுகளுடன் கொண்டாடி வரும் கேசி தமிழ் மன்றம், மூத்தோர் நலம் பேணுதல் உள்ளிட்ட பல்வேறு சமூக நலத் திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றது. அத்துடன் அரையாண்டு சஞ்சிகையாக இளவேனிலை வெளிக்கொணர்வதில் அயராத பங்களிப்பை வழங்கி நிற்கின்றது.

இத்தருணத்தில் மன்றத்தின் வளர்ச்சிக்கும், இளவேனிலின் தொடர்ந்த மலர்விற்கும் உங்களின் மேலான பங்களிப்பையும், ஆலோசனைகளையும், ஆதரவையும் வேண்டி நிற்பதோடு, பிறந்திருக்கும் புத்தாண்டு அனைவருக்கும் இன்பமும் மகிழ்ச்சியும் சுபீட்சமும் நிறைந்த இனிய ஆண்டாக விளங்க வேண்டும் என வாழ்த்தி அமைகிறேன்.

நன்றி

***க. மணிவண்ணன்***

*தலைவர், கேசி தமிழ் மன்றம்*

# தமிழ்ப் புத்தாண்டு

பாடும்மீன் சட்டத்தரணி
சு.ஸ்ரீகந்தராசா

**தை** பிறந்துவிட்டால் தமிழ்ப் புத்தாண்டு மலர்ந்துவிடும். தமிழ்ப் புத்தாண்டு என்பது தைப்பொங்கல் என்று கொண்டாடப்படும் தைப்பிறப்பா அல்லது சித்திரை வருடப்பிறப்பு என்று சொல்கிறோமே அதுவா என்கின்ற மயக்கம் இன்னும் தமிழ்மக்களிடையே இருக்கிறது. சரிவரத் தெரியாத மக்களிடம் இருப்பது மயக்கம். சரியெதுவெனத் தெரிந்த தமிழர்கள்கூட சரியானதைப் பின்பற்றாமல் விடுவதற்குக் காரணம் வழக்கம். அதனை மாற்றுவதா என்கின்ற தயக்கம்.

இத்தனைக்கும் சித்திரையைப் புத்தாண்டாகக் கொள்ளுகின்ற வழக்கம் தமிழர்களிடையே தொன்று தொட்டு இருந்துவந்ததொன்றல்ல. இடைக்காலத்திலே தமிழர்களிடையே ஏற்பட்டுவிட்ட பழக்கம். ஆரியர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு நம்மை இறுகப் பற்றிக்கொண்ட எண்ணற்ற மூடநம்பிக்கைகளில் இதுவுமொன்று.

சித்திரைப் புத்தாண்டு தமிழர்களின் புத்தாண்டு அல்ல. சித்திரை முதல் நாள் தமிழர்களின் புதுவருடப்பிறப்பு அல்ல. அது இந்துக்களின் புதுவருடப்பிறப்பு என்று சொல்லப்படுகின்றது. சிங்களவர்களுக்கும் சித்திரையில்தான் புதுவருடம் பிறக்கிறதாம். இலங்கை நாட்காட்டிகளில் ஏப்பிரல் 14 ஆம் திகதி இந்து, சிங்கள புதுவருடப்பிறப்பு என்றுதான் குறிப்பிடப்படுகின்றது. தமிழர்களின் புதுவருடப்பிறப்பு என்று குறிப்பிடப்படுவதில்லை. அவ்வாறு எங்காவது குறிப்பிடப்பட்டிருந்தால் அது தவறாகும்.

தமிழ்ப் புத்தாண்டு பற்றிய உண்மைநிலையைத் அறிவுபூர்வமாகவும், ஆராய்ச்சியின் அடிப்படையிலும் தமிழ்மக்களுக்கு உணர்த்துவதற்காக, 1921 ஆம் ஆண்டு சென்னை பச்சையப்பன் கல்லூரியிலே தமிழ் அறிஞர்கள், செந்தமிழ்ப் புலவர்கள் கூடி ஆராய்ந்திருக்கிறார்கள். தமிழ்க்கடல், நிறைதமிழ் அறிஞர் மறைமலை அடிகள் அவர்களது தலைமையிலே அந்த ஆராய்ச்சி நடைபெற்றிருக்கின்றது.

மாபெரும் தமிழறிஞர்களும் கல்விமான்களுமான தமிழ்த்தென்றல் திரு.வி.கல்யாணசுந்தரனார், தமிழ்க்காவலர் கா.சுப்பிரமணியம்பிள்ளை, சைவப்பெரியார் சச்சிதானந்தம்பிள்ளை, நாவலர் சோமசுந்தர பாரதியார், நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார், முத்தமிழ்க்காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் ஆகியோர் அந்த அறிஞர் குழுவிலே இருந்திருக்கிறார்கள்.

அத்தனை அறிஞர் பெருமக்களும் ஒன்றாகக்கூடி தமிழ்ப் புத்தாண்டு பற்றி ஆராய்ந்திருக்கிறார்கள். முடிவுகண்டிருக்கிறார்கள். 500 இற்கும் மேற்பட்ட தமிழ் அறிஞர்கள் அந்தமுடிவிற்குத் தமது ஏற்பிசைவை வழங்கியிருக்கின்றார்கள். அவர்களது முடிவின்படி இயேசுகிறீஸ்து பிறப்பதற்கு 31 ஆண்டுகளுக்கு முன்னர் பிறந்தவர் திருவள்ளுவர் என்றும், அவரது பெயரில் தொடர்ஆண்டுக் கணக்கீட்டைப் பின்பற்றுவது என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

அந்த முடிவுகளின்படி, திருவள்ளுவர் ஆண்டுக்கு முதல் மாதம் தை. இறுதி மாதம் மார்கழி. புத்தாண்டுத் தொடக்கம் தை முதல்நாள் ஆகும். கிழமை நாட்கள் ஏழு. அவை, ஞாயிறு, திங்கள், செவ்வாய், அறிவன், வியாழன், வெள்ளி, காரி என்பனவாகும். புதனும், சனியும் தமிழ்ப்பெயர்கள் அல்லவென்பதால் அவற்றுக்கான பண்டைய தமிழ்ப்பெயர்களான அறிவன், காரி என்பன முறையே வழங்கப்படவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது. ஆங்கில ஆண்டுடன் 31ஐக் கூட்டினால் வருவது திருவள்ளுவர் ஆண்டு. அதுவே தமிழ் ஆண்டுக் கணக்கு.

அறிஞர்களது தீர்மானத்தை அன்றைய தமிழக அரசு அப்படியே ஏற்றுக்கொண்டது. அதன்பின்னர் திருவள்ளுவர் ஆண்டு முறையை 1971 ஆம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு நாட்குறிப்பிலும், பின்னர் 1972 இலிருந்து தமிழக அரசின் அதிகாரபூர்வமான

இதழிலும், 1981 இலிருந்து தமிழகத்தின் அனைத்து அரசு அலுவலகங்களிலும் தமிழக அரசு நடைமுறைப்படுத்தி வருகின்றது. 2009 ஆம் ஆண்டு தமிழக அரசு தைப்பிறப்பையே தமிழ்ப்புத்தாண்டு என்றும் சித்திரைமாதத்தில் தமிழ்ப்புத்தாண்டு இல்லை என்றும் சட்டபூர்வமாக ஆணை பிறப்பித்தது. தமிழ் மக்களின் புத்தாண்டு விடயத்திற்குச் சட்டரீதியான அந்தஸ்துக் கொடுக்கப்பட்டமை மகிழ்ச்சிக்குரிய விடயமே.

ஆனால் தமிழ் அரசியல் தலைவர்களின் அரசியல் முதிர்ச்சியற்ற நிலைமையும், நாகரிகமற்ற தன்மையும், தமிழ்ப் புத்தாண்டு விடயத்தையும் அரசியல் சாக்கடைக்குள் தள்ளிவிட்டிருப்பது தமிழ் இனத்தின் துர்ப்பாக்கியமாகும். தைப்பிறப்பைத் தமிழ்ப் புத்தாண்டென அரசாணை பிறப்பித்தது கலைஞர் கருணாநிதி அவர்களின் தி.மு.க. அரசு என்ற ஒரே காரணத்திற்காக, கடந்த ஆண்டு ஆட்சிக்கு வந்த செல்வி. ஜெயலலிதா அவர்கள் அந்த அரசாணையை மாற்றி, சித்திரையே தமிழ்ப் புத்தாண்டு என தீர்மானம் போடும் முடிவுக்கு வந்தார். தைப்பிறப்பே தமிழ்ப்புத்தாண்டு என்பது கலைஞர் கருணாநிதியின் தீர்மானம் அல்ல. கலைஞர் பிறப்பதற்கு முன்னரே, 1921 ஆம் ஆண்டு தமிழ் இனத்தின் சார்பாகத் தமிழ்ப் புலவர்களாலும், அறிஞர்களாலும் எடுக்கப்பட்ட முடிவு அது. இதனை நன்கறிந்த தமிழ் அறிஞர்களும், ஆர்வலர்களும் செல்வி ஜெயலலிதா அவர்களின் கட்சியிலும் இருக்கிறார்கள். என்ன செய்வது எடுத்துச்சொல்லும் திராணியற்றவர்களாக இருக்கிறார்கள்!



யாரும் அறிவுரை சொல்லப் பயப்படுகின்ற நிலைமையைத் தமிழ் தலைமைகள் பேணிவந்தமையும், மாற்றுக் கருத்துக்களைச் சொன்னவர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்பட்ட மையும்தான் தமிழ் இனத்தின் வீழ்ச்சிக்கு காரணமானவை என்பதுதானே வரலாறு. அந்த நிலை இன்னும்தான் நீடிக்கிறது.

சிந்துவெளி மக்கள் தைமுதல் மார்கழி வரையான பன்னிரண்டு மாதங்களையே தமிழ் மாதங்களாகப் பின்பற்றி வந்துள்ளனரென்று வரலாற்று ஆராய்ச்சி யாளர்கள் சான்று பகர்ந்துள்ளனர். தை முதல் மார்கழி வரையான பன்னிரண்டு மாதப்பெயர்களும் சுத்தமான தமிழ்ப் பெயர்கள் என்பதுடன், தொல்காப்பியர் காலத்திலேயே அவை வழக்கத்திலிருந்தன என்று கூறுகின்றார் மொழியறிஞர் சி.இலக்குவனார் அவர்கள்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பை அடிப்படையாகக் கொண்டு கி.மு என்றும் கி.பி. என்றும் உலக வரலாறு வரையறுக்கப்பட்டு வருகின்றது. அதேபோலப் புத்தரின் வரலாற்றை அடிப்படையாகக்கொண்டு புத்த சமயத்தினர் புத்த ஆண்டு என்று கணித்துப் பின்பற்றுகின்றார்கள். இவற்றுக்கெல்லாம் எத்தனையோ ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட தமிழ்ப் புத்தாண்டு வழக்கத்தை இடையிலே கைவிட்டுவிட்டு எதையெதையோவெல்லாம் தமிழர்கள் பின்பற்றுவது எவ்வளவு துர்ப்பாக்கியமானது.

தைமாதத்தைத் தமிழ்ப் புத்தாண்டு என்று கொண்டா டினால் கிரக மாற்றங்களில் குளறுபடி ஏற்படுமாம், பஞ்சாங்கக் கணிப்புத் தவறாகிவிடுமாம் என்றெல்லாம் சிலர் மக்களைக் குழப்புகின்றார்கள். இது என்ன பேதைமை! சித்திரையை அடிப் படையாக வைத்துத்தான் கிரக சஞ்சாரங்கள் நடைபெறுகின்றன என்றால் அவை அப்படியே நடக்கட்டும். அவற்றுக்கு அமைவாக எழுதப்பட்ட பஞ்சாங்க ங்கள் அப்படியே இருக்கட்டும். சித்திரை மாதக் கிரக நிலையைத் தைமாதத்திற்கு நகர்த்தும்படி யாரும் கூறவில்லை. பஞ்சாங்கங்களைத் திருத்தும்படி யாரும் சொல்லவில்லை. அதற்கு அவசியமும் இல்லை. ஆனால் சித்திரை மாதம் என்பது தமிழ்ப் புத்தாண்டின் தொடக்கம் அல்ல. தைமாதமே தமிழ்ப் புத்தாண்டின் முதல் மாதம் என்றும், தைமுதல் திகதியே தமிழ்ப் புத்தாண்டின் முதல்திகதி என்றும் கொண்டாடுவோம். அவ்வாறு நாம் கொண்டாடுவதால் கிரகமாற்றங்களில் கோளாறு ஏற்படும் என்பதும், பஞ்சாங்கம் பொய்த்துவிடும் என்பதும் குருட்டுத்தனமான மூடநம்பிக்கைகள். நகைப்பிற்கிடமான விதண்டா வாதங்கள். மக்களைக் குழப்பும் முயற்சிகள்.

*தையே முதற்றிங்கள் தைம்முதலே ஆண்டுமுதல்*
*பத்தன்று, நூறன்று, பன்னூறன்று*
*பல்லாயிரத்தாண்டாய்த் தமிழர் வாழ்வில்*
*புத்தாண்டு, தைம்முதல்நாள், பொங்கல் நன்னாள்*

என்று தைத்திங்கள் திருநாளை, தமிழினத்தின் திருநாளாக, தமிழ் வருடத்தின் முதல்நாளாக, தமிழ்ப் பண்பாட்டின் பெருநாளாக போற்றிப் பாடுகின்றார் புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் அம்மொழியே பொன் மொழியாகட்டும். அனைத் துலகத் தமிழர்களுக்கும் ஒரே வழியாகட்டும்.

எனவே தை முதல் நாளையே தமிழ்ப்புத்தாண்டெனக் கொண்டாடும் நமது பண்டைய வழக்கத்தினை உலகத் தமிழ்மக்கள் அனைவரும் வழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். வாழ்வில் கடைப்பிடிக்கவேண்டும்.

கடந்த வருடம் அடைந்த துயரெல்லாம் கனவாக மறந்து, நடந்த வாழ்வில் மகிழ்ந்ததை யெல்லாம் நினைவோடு சுமந்து, புலர்ந்து வருகின்ற தைமுதல் நாளிலே புத்தூக்கமடைந்து

காலையில் எழுந்து, கதிரவனை வணங்கிப் புத்தாடை அணிந்து, புத்தாண்டை வரவேற்பது பண்டைத் தமிழர் பண்பாடு.

காலையில் வழிபாடு. பகலில் உறவினர்களோடு மகிழ்ந்து உறவாடல். உணவு பரிமாறல். உண்டு களைப்பாறல். மாலையில் களியாடல். கலைகள் அரங்கேறல். ஊரே திரண்டு ஒன்றாய் மகிழ்ந்து கொண்டாடல். இதுதான் தமிழரின் தாயகங்களின் தைத்திருநாள்.

வாசலில் கோலமிட்டு, மாவிலையிலும், மஞ்சள் குருத்தோலையிலும் தோரணங்கட்டி, புத்தரிசி கொண்டு, புதுப்பானையில் பொங்கலிட்டு, தலைவாழையிலையில் பொங்கலும், பழங்களும், கரும்பும் படைத்து, கதிரவனை நோக்கிக் கைகூப்பித்தொழுது நன்றிதெரிவிக்கும் நந்நாளே பொங்கல் திருநாள். அது வருடத்தில் ஒருநாள். தமிழர்க்குப் பெருநாள். புத்தாண்டின் முதல் நாள்.

வாழுகின்ற இடத்தால் வேறுபட்டாலும், வணங்குகின்றமதத்தால்வேறுபட்டாலும், சார்ந்துள்ள அரசியல் கருத்தால் வேறுபட்டாலும், தனிப்பட்ட குணத்தால் வேறுபட்டாலும் தமிழர் என்ற இனத்தால் ஒன்றுபடுவோம். தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடுவோம். தைமுதல்நாளே புத்தாண்டு என்று உறுதி பூணுவோம். எங்கு வாழ்ந்தாலும் அந்த வழக்கத்தைப் பேணுவோம்.

தைத் திங்கள் முதல்நாளே தமிழர் நமது புதுவருடப் பெருநாள். தங்கத் தமிழினத்தின் தைப்பொங்கல் திருநாள். எனவே, பொங்கல் திருநாளிலேயே நமக்குப் புதுவருடம் பிறக்கிறது என்பதை, பொங்கல் திருநாளே நமது புத்தாண்டு என்பதை, எங்கும் பறைசாற்றுவோம். எப்போதும் அதனைப் பின்பற்றுவோம். தப்பாமல் நம் வாழ்நாளில் கடைப்பிடிப்போம்.

வாழ்க தமிழ்!

## சங்க இலக்கியங்களில் தைப்பொங்கல்



**"தைத் திங்கள் தண்கயம் படியும்" என்று நற்றிணை**

**"தைத் திங்கள் தண்ணிய தரினும்" என்று குறுந்தொகை**

**"தைத் திங்கள் தண்கயம் போல்" என்று புறநானூறு**

**"தைத் திங்கள் தண்கயம் போல" என்று ஐங்குறுநூறு**

**"தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ" என்று கலித்தொகை**

# பருத்தித்துறை ஊராம்

ஆரபி மதியழகன்

**நா**ன் என் குடும்பத்தோடு பருத்தித்துறைக்குப் போகிறோம் என்று என் அம்மா சொன்ன போது எனக்கு மிகவும் பரபரப்பாக இருந்தது. நான் ஒரு நாளும் என் பிறந்த நாட்டுக்குப் போகவில்லை. அதனால் எனக்கு ஒரு பக்கம் ஆர்வமாக இருந்தது. மறுபக்கம் சந்தோசமாக இருந்தது. என் அப்பாவும் அம்மாவும் இலங்கை நல்லது என்று சொல்லிக் கொண்டு இருப்பார்கள். அதனால் எனக்கு இலங்கை மிகவும் விருப்பமாக இருக்கும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

விமானத்தால் இறங்கிய உடனே மிக மிக சூடாக இருந்தது. அண்டார்டிக்காவில் இருந்து சகாரா பாலைவனத்திற்குள் போகின்றமாதிரி இருந்தது. எனக்கு சூடு தாங்க முடியவில்லை. பருத்தித்துறையில் குளிரூட்டி போட்டு வெறும் நிலத்தில் படுக்கத்தான் நன்றாக இருந்தது.

அதிகாலை எழும்பி என் அப்பாவுடன் துவிச் சக்கர வண்டியில் ஊரைச் சுத்தினேன். பருத்தித் துறையில் பல வாகனங்கள் இல்லை. அதனால் நான் பயமில்லாமல் ஓடினேன். முதலில் துவிச்சக்கர வண்டியில் ஓடுறது கஸ்டமாக இருந்தது. ஆனால் உடனே பழகி ஓடத்தொடங்கினேன். துவிச்சக்கரவண்டி ஓடுறது எனக்கு மிகவும் பிடித்தது.



அதோடு பருத்தித்துறையில் நாங்கள் இருந்த வீட்டிற்குப் பக்கத்தில் ஒரு பாற்சாலை இருந்தது. அந்தக் கடையில் இருக்கும் பொருட்கள் மிகவும் சுவையாக இருந்தது. அவுஸ்ரேலியாவில் ஒரு நாளும் அதை விட சுவையான உணவு சாப்பிட்டதில்லை. அங்கே பால்க் கட்டி, வெண்ணெய், இனிப்பு வகைகள் என்று பல பொருட்கள் இருந்தன. நான் இதை எழுத மீண்டும் பாற்சாலைக்குப் போக வேண்டும் போல இருக்கின்றது.

இலங்கையில் இலையான், நுளம்புகள், வண்டுகள் என்று பல பூச்சிகள் இருந்தன. எவ்வளவோ நுளம்பு வகைகள் அல்லது நுளம்பு மருந்து பாவித்தாலும் நுளம்புகள் என்னைக் கடித்துக் கொண்டே இருக்கும்.

ஆனால், எனக்கு கழிவறை விருப்பமே இல்லை. கழிவறைக்குப் போகவேண்டும் என்றால் வீட்டிற்கு வெளியால் நடந்து போக வேண்டும். அதோடு




குளியல் அறைக்குள் மூன்று தவளைகள் இருந்தன. இரவில் குளியில் அறைக்குள் போனால் மிகவும் இருட்டாக இருக்கும். ஏன் என்றால் ஒரு மின் ஒளியும் இருக்கவில்லை.

பருத்தித்துறை எதிர் பார்த்ததை விட மோசமாக இருந்தது. ஆனால் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.



# நான் விரும்பும் காலம்

● துவாரகன் சந்திரன்

நான் விரும்பும் காலம் கோடை காலம் ஆகும். இக் காலத்தில் பூக்கள் பூத்து மிக அழகாக இருக்கும். கோடை காலத்தில் பல நிகழ்வுகளில் பங்குபெறலாம். உதாரணமாக விளையாட்டுப் போட்டிகள், விடுமுறை காலமாக இருப்பதால் வெளிநாடுகளுக்குச் செல்லுதல் தோட்ட வேலைகள் செய்தல் முதலானவற்றைக் குறிப்பிடலாம்.

கோடை காலத்தில் வெயில் அதிகமாக இருப்பதால் சூரிய ஒளி நம்மைப் பாதிப்பதால் குளிர்ச்சியாக இருப்பதற்கு பழவகைகள், பச்சைக் காய்கறிவகைகள், தயிர் போன்ற சாப்பாடுகளை அதிகளவில் உட்கொள்ள வேண்டும். தண்ணீர் அதிகளவில் குடிக்க வேண்டும். சூரிய ஒளி அதிகமாகத் தாக்கினால் அதற்குரிய மருந்துகளைப் பாவித்துத் தோலைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

கோடை காலத்தில் அதிக விளையாட்டுக்கள் விளையாடலாம். உதாரணமாக மட்டைப் பந்து, காற்பந்து, உதைபந்து, குதிரை ஓட்டம், ஒட்டக ஓட்டம் முதலியவற்றைப் பார்த்தும், விளையாடியும் மகிழலாம்.

எனவே எனக்குப் பிடித்த காலம் கோடை காலம் ஆகும். ஏனெனில் கோடைகாலத்தில் நீண்டகால விடுமுறை இருப்பதால் நாம் மகிழ்ச்சியாக இருந்து உடம்பைப் பாதுகாத்து, விளையாட்டுக்களை விளையாடி மகிழலாம்.

## அக்கினிக் குஞ்சு

*அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை*
*அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்*
*வெந்து தணிந்தது காடு - தழல்*
*வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?*
*தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்.*

- சி. சுப்ரமணிய பாரதியார்.

# குமரிக்கண்டமும் சங்கங்களும்

கீர்த்தனா ஜெயரூபன்

சுமார் கி.மு 5,00,000 ஆண்டுகளுக்கு முன்பு அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மற்றும் இந்தியாவை இணைத்துக் கொண்டிருந்த நீண்ட நிலப்பரப்பே குமரிக்கண்டம் ஆகும். குமரிக்கண்டத்தில் தான் தமிழர்கள் முதன் முதலில் தோன்றினர் என்று தேவநேயப் பாவாணர் எழுதியுள்ளார். பேரறிஞர் கட்டு எலியட், எக்கேல் மற்றும் கிலேற்றர் குமரிக்கண்டம் இருந்தது உண்மை தான் என்றும் அங்கு தான் தமிழர்கள் தோன்றினார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார்கள். "பஃறுளியாறும்", "பன்மலை அடுக்கத்துக் குமரிக்கோடும்" "கொடுங்கடல் கொண்டது"என சிலப்பதிகாரத்தில் குமரிக்கண்டத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

1960 ஆம் ஆண்டு, இந்து மாக்கடலில் கடல்தள ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆராய்ச்சியில் கன்னியாக்குமரிக்குத் தெற்கே இரண்டு கண்டங்கள் இருந்திருப்பதை கண்டு பிடித்துள்ளார்கள். குமரி 152 மைல்கள் தெற்காக விரிந்திருந்தது என்றும், 1600 வீதிகள் இருந்தன என்றும் அகிலத்திரட்டு அம்மானை என்னும் புத்தகத்தில் அய்யாவழி மதத்தினரால் குறிப்பிடப்பட்டுள்ளது. "Ancient India" புத்தகத்தில் குமரிக்கண்டமும் தென்னிந்தியாவும் இணைந்த பகுதிகளின் வரைபடங்கள் கிடைக்கப்பட்டிருக்கின்றன. இவை மட்டுமல்லாது இராமாயணத்திலும் குமரிக்கண்டத்தைப் பற்றித் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குமரிக்கண்டத்தில் இருந்த மதுரையில் அதாவது தென்மதுரையில் தான் முதலாம் சங்கம் இருந்ததென்றும், அத்துடன் அதனைத் தொடர்ந்து இரண்டாம், மூன்றாம் சங்கங்கள் இருந்தன என்பதை நூல்கள் வாயிலாக அறியக்கூடியதாக உள்ளது. கி.மு ஐந்தாம் நூற்றாண்டிலிருந்து கி.பி இரண்டாம் நூற்றான்டு வரை 700 ஆண்டுகளுக்கு சங்க காலம் இருந்தது என்பதை ஆராய்சியாளர்களால் நிறுவப்பட்டுள்ளது.

## முதற்சங்கம்

குமரிக்கண்டத்தில் இருந்த தென் மதுரையில் முதற்சங்கம் உருவாக்கப்பட்டது. காய்சினவழுதி என்ற மன்னனால் முதற் சங்கம் தொடங்கப்பட்டு கடுங்கோன் என்ற மன்னன் வரை பாண்டிய மன்னர்கள் இச்சங்கத்தை பராமரித்து வந்தார்கள். அகத்தியம் என்னும் நூல் இச்சங்கத்திலேயே உருவாக்கப்பட்டது. இவ்வாறு இருந்த முதற்சங்கம் கடல்கோளினால் மூழ்கி அழிந்தது.

## இடைச்சங்கம்

தென்மதுரை கடல் கோளினால் அழிந்த பின்னர் பாண்டிய மன்னர்கள் கபாடபுரத்தைத் தலைநகராகக் கொண்டு மீண்டும் தமிழ்ச்சங்கத்தை உருவாக்கினர். வெண்டேர்ச்செழியன் முதல் முடத்திருமாறன் வரை பாண்டிய மன்னர்கள் இச்சங்கத்தை பராமரித்து வந்தார்கள். இச்சங்க காலத்தில் தான் தொல்காப்பியர் வாழ்ந்து வந்தார். இடைச்சங்கம் அமைந்திருந்த கபாடபுரம் பின்னர் மீண்டும் ஏற்பட்ட கடல் கோளினால் முற்றாக அழிக்கப்பட்டது.

## கடைச்சங்கம்

கபாடபுரம் கடலில் மூழ்கிய பின்பு, இப்பொழுதுள்ள மதுரை பாண்டியமன்னர்களின் தலைநகரானது (இன்றைய மதுரை அந்த காலத்தில் வடமதுரை என்று அழைக்கப்பட்டது). வடமதுரையில் மூன்றாம் சங்கம் அமைக்கப்பட்டது. இளத்திருமாறன், நக்கீரனார் இச்சங்க காலத்திலேயே வாழ்ந்து வந்தார்கள். பேரும், புகழுடனும் விளங்கிய மூன்றாம் சங்கம் பின்பு நடைபெற்ற படையெடுப்புகளின் பின்பு அழிக்கப்பட்டது.

## நான்காம் சங்கம்

முன்னாளில் தமிழ் மொழிக்கு இருந்து வந்த ஏற்றத்தையும், பின்னாளில் ஏற்பட்ட தாழ்வையும் எண்ணி வருந்திய பாண்டித்துரைத் தேவர் நான்காம் தமிழ்ச் சங்கத்தை 1901 ஆம் ஆண்டு ஆரம்பித்தார். அரசின் பொருட்கொடையையோ, பல்கலைகழகங்களின் உதவியையோ எதிர்பாராது இச்சங்கம் தொடங்கப்பட்டது. இச்சங்கமானது தமிழுக்குப் பல சேவைகள் புரிந்த வண்ணம் உள்ளது. தமிழை வளர்ப்பதற்காகத் தமிழ்க் கல்லூரிகள் உண்டாக்கியது மாத்திரமன்றி தமிழ்த் தேர்வு நடாத்தி பட்டமும் பரிசும் வழங்கி வருகின்றது.

தமிழர்கள் தோன்றிய குமரிக்கண்டம் கடலுக்கடியில் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தாலும், இன்று வரை தமிழின் பெருமையை உலகெங்கும் பறை சாற்றிக் கொண்டு தான் இருக்கின்றது.

# இங்கிலிஸ் வாத்தியாரின் தமிழ்க் கடிதம்

## தமிழ் செம்மொழி என அறிவிப்பதற்கு முன் எழுதப்பட்ட மடல்

எழுத்து: ஜார்ஜ் எல்.ஹார்ட் தமிழாக்கம்: சி.பொன்னரசு

பேராசிரியர் மறைமலை அவர்கள்,

தமிழின் செம்மொழி நிலையைப் பற்றி எழுதவேண்டும் என்ற வேண்டுகோளுக்கிணங்கி அதற்கு செவிசாய்ப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

1975 லிருந்து அமேரிக்க கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக பணிபுரிந்த நான் தற்பொழுது அங்கு அவைத்தலைவராக பணிபுரிந்து வருகிறேன். 1970-ல் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதத்தில் பட்டம்பெற்ற நான், 1969-ல் பெற்ற முதல் வேலை விஸ்கான்சின் பல்கலைக்கழகத்தின் சமஸ்கிருத பேராசிரியராக ஆனது. தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழி தவிர, செம்மொழிகளாகிய இலத்தீன் மற்றும் கிரேக்க மொழியுமறிந்து அதன் இலக்கியங்களை வெகுவாகப் படித்துமிருக்கிறேன். அதுமட்டுமன்றி, நவீன ஐரோப்பாவின் ஒப்பீட்டு மொழியியல் மற்றும் இலக்கியங்களை (நான் இரஷ்யன், ஜெர்மன் மற்றும் பிரெஞ்ச் மொழிகளறிந்து அதன் இலக்கியங்களையும் வெகுவாகப் படித்திருக்கிறேன்) அறிந்ததோடு மட்டுமன்றி, நவீன இந்தியாவின், தமிழ் மற்றும் மலையாளம் தவிர, பிற மொழிகளுடைய இலக்கியங்களை மொழிமாற்றத்தில் படித்துமிருக்கிறேன். தெலுங்கு இலக்கியங்கள் மற்றும் அதன் மரபுகளை, வாழும் மிகப்பெரிய தெலுங்கறிஞர் வி. நாராயணராவ் அவர்களுடன் கலந்து பேசியறிந்திருக்கிறேன். தென்னாசிய மொழித்துறையின் நீண்ட நாள் உறுப்பினராக இருந்ததினால் இந்தி இலக்கியத்தின் சுவையறிந்ததோடு மட்டுமன்றி, மகாதேவி வர்ம, துளசி மற்றும் கபீர் பற்றியும் படித்திருக்கிறேன்.

என்னுடைய வாழ்க்கையின் பெரும்பகுதியை (1963 முதல்) சமஸ்கிருதம் படிப்பதில் செலவிட்டதின் மூலம் காளிதாசா, மகாவை முழுமையாகவும், பாரவி மற்றும் ஸ்ரீ ஹர்சாவின் பகுதிகளையும் அசல் வடிவில் படித்திருக்கிறேன். ரிக் வேதத்தின் ஐந்தாவது நூல், உபநிடதங்கள், மகாபாரதத்தின் பெரும்பகுதிகள், கதசரிட்சகரா, ஆதிசங்கரரின் படைப்புகள் மற்றும் பல சமஸ்கிருத படைப்புகளையும் படித்திருக்கிறேன்.

என்னுடைய புலமையை பறைசாற்றுவதற்காக நான் இதைச் சொல்லவில்லை ஓர் இலக்கியத்தை செம்மையானதா இல்லையா என்று மதிப்பிடும் தகுதி எனக்கு இருக்கிறது என்பதைத் தெரியப்படுத்தவே இந்த முன்னுரை. எவ்வித அளவீட்டை வைத்துப் பார்த்தாலும், தமிழ் இவ்வுலகத்தின் மிகப்பெரிய இலக்கியம் மற்றும் மரபுகளில் ஒன்று என்பதற்கு மாற்றுக்கருத்து என்னிடம் ஏதுமில்லை.

இதற்கு எத்தனையோ காரணங்கள் உண்டு. அவை ஒவ்வொன்றையும் இப்பொழுது நாம் கவனமாகப் பார்ப்போம்.

முதலாவது, தமிழ் மிகத் தொன்மையானது. மற்ற நவீன இந்திய இலக்கியங்களைவிட ஆயிரம் வருடங்களுக்கு மேல் முந்தியது. அதன் மிகப் பழமையான, தொல்காப்பியத்தின் பகுதிகளையும், தமிழ் கல்வெட்டுகளையும் வைத்துப்பார்த்தால் அது ஏறத்தாழ கி.மு 200-ஐச் சேர்ந்தது. தமிழின் மிக உயர்ந்த படைப்புகளான சங்கப் பாடல்களும் பத்துப்பாட்டும் கி.பி

முதல் மற்றும் இரண்டாம் நூற்றாண்டுகளைச் சார்ந்தவை. அப்பாடல்கள் காளிதாசாவின் சமஸ்கிருத படைப்புகளைவிட 200 ஆண்டுகள் முந்தியவை.

இரண்டாவது, தமிழ் இந்தியாவிற்கே உரிய, சமஸ்கிருதத்திலிருந்து கறவாத, சுய இலக்கிய மரபைக்கொண்டது. உண்மையென்னவெனில், சமஸ்கிருதத்தின் தாக்கம் தென்னிந்தியாவிற்கு வருவதற்கு முன்னரே தமிழ் இலக்கியங்கள் தோன்றியதோடல்லாமல் சமஸ்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளைவிட பண்படிப்படையில் மிகவும் வேறுபட்டது. அது தனக்கே உரிய கவித்துவமும், இலக்கண மரபும், சொந்த அழகும், அதற்கு மேலாக, தனித்துவம் வாய்ந்த இலக்கியத்தையும் கொண்டது. சமஸ்கிருதம் மற்றும் பிற இந்திய மொழிகளிலில்லாத ஓர் வளமான, அறிவார்ந்த மரபுகொண்ட இந்திய உணர்வை தமிழ் பிரதிபலிக்கின்றது.

மூன்றாவது, தரத்தைப் பொறுத்தவரையில் தமிழ் இலக்கியங்கள், சமஸ்கிருத, கிரேக்க, இலத்தீன், சீன, பாரசீக மற்றும் அரேபிய மொழிகளிலுள்ள உயர்ந்த இலக்கியங்களுக்கு நிகரானது. அதன் நுட்பமும், ஆழமும், பரந்த கருத்துக்களும், உலகளாவிய சிந்தனைகளும் தமிழை இவ்வுலகத்தின் செம்மையான மரபு மற்றும் இலக்கியங்களில் ஒன்றாக நிலைநிறுத்துகின்றது. எல்லோருக்கும் தெரிந்த திருக்குறள், உலகத்தில் அறத்தைப்பாடிய பாடல்களில் முதன்மையான ஒன்றாக விளங்குகிறது. எண்ணற்ற பலதிறப்பட்ட தமிழ் இலக்கியப் படைப்புகளில் இதுவும் ஒன்றென்று சொன்னாலும், திருக்குறள் மனித வாழ்வில் ஆராயாத, வழிகூறாத பொருளே இல்லை எனச் சொல்லக்கூடிய ஓர் உயர்ந்த இலக்கியப் படைப்பு.

இறுதியாக, நவீன இந்தியக் கலாச்சாரத்தையும் மரபுகளையும் பிரதிபலிக்கிற முதற் சுதந்திர ஆதாரமாகத் தமிழ் விளங்குகிறது. சமஸ்கிருதக் கவிதை மரபில் தென்னிந்திய மரபு ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தைப் பற்றி நான் நிறைய எழுதியிருக்கிறேன். அதுபோன்றே முக்கியமானது, இந்துமதம் பற்றி சங்ககாலம் முதலாக எழுதப்பட்ட புனிதமான தமிழ் இலக்கியங்கள் நவீன இந்துமதத்தை பலப்படுத்தியிருக்கின்றன. அதன் கருத்துக்கள் பகவத புராணம் மற்றும் பல நூல்களில் (தெலுங்கு, கன்னடம் மற்றும் சமஸ்கிருதத்தில்) பயன்படுத்தப்பட்டு இந்தியா முழுதும் பரவியிருக்கிறது. தமிழில் வேதத்திற்கு இணையான புனிதமான படைப்புகள் உள்ளன. அவை பல தென்னாட்டு கோயில்களில் (திருப்பதி போன்ற) படிக்கப்படுகின்றன. நவீன இந்தோ-ஆர்ய மொழிகளுக்கு சமஸ்கிருதம் தொடக்கமாக இருப்பது போல் தென்னிந்திய மொழிகளுக்கு தமிழ் முதன்மையான மொழியாகவுள்ளது. இந்தோ-ஆர்ய மொழிகளில் எப்படி சமஸ்கிருதம் மிகக் குறைவான மாற்றத்தைக் கண்டிருக்கிறதோ அதேபோன்று தமிழும் திராவிட மொழிகளில் மிகக் குறைவான மாற்றத்தைக் கண்டதோடன்றி இலக்கியவாதிகள் படித்து திராவிட இனத்தின் இயற்கையையும் வளர்ச்சியையும் புரிந்துகொள்ள உதவும் ஓர் உரைகல் எனச் சொல்லலாம்.


தமிழ் ஏன் இன்னும் ஒரு செம்மொழியாக அறிவிக்கப்படவில்லை என யோசித்தால், அரசியல் மட்டுமே அதற்குக் காரணமாக இருக்கமுடியும். தமிழை செம்மொழியாக அறிவித்தால் எங்கே மற்ற மொழிகளும் செம்மொழி அங்கீகாரம் கேட்டு விடுமோ என்ற பயம். இது தேவையற்ற கவலை. எனக்கு பல இந்திய மொழிகளின் உயர்வு தெரியும், அவை மற்ற உலக இலக்கியங்களோடு சம நிலையில் நிற்கக்கூடிய உயர்ந்த இலக்கியத்தகுதி படைத்தவை. ஆனாலும் அவை செம்மொழியாகா. அவை இங்கிலிஷ் மற்றும் நவீன ஐரோப்பிய மொழிகளைப்போல் (கிரேக்கம் தவிர) இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிறகு வளர்ந்த மொழிகள். கிரேக்க மொழி செம்மொழி என உலகம் முழுதும் அங்கீகரிக்கப்படுவதால், இங்கிலிஷ் அல்லது பிரெஞ்ச் மொழி செம்மொழி அங்கீகாரம் கேட்க இயலாது.

ஒரு மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட பல நிபந்தனைகளுண்டு: அது பழமையானதாக இருக்க வேண்டும், தன்னிச்சையாகத் தனிப்பட்ட மரபோடு வளர்ந்திருக்க வேண்டும், பற்பல உயர்ந்த தொன்மையான இலக்கியங்கள் படைக்கப்பட்டிருக்க வேண்டும். தமிழ், மற்ற நவீன இந்திய மொழிகளைவிட எல்லா நிபந்தனைகளையும் முழுமையாகப்

பூர்த்தி செய்கிறது. தமிழ் மிகப் பழமையானது (இலத்தீனைப் போல் பழமையானது; அரேபிய மொழிக்கு முந்தையது) தனிப்பட்ட சுதந்திர மரபோடு வளர்ந்த மொழி, சமஸ்கிருதம் மற்றும் பிற மொழிகளின் தாக்கமற்றது. அதன் பண்டைய இலக்கியங்கள் கருத்துச் செறிவு மிக்கவை மற்றும் உயர்ந்தவை.

தமிழ் ஒரு செம்மொழிதான் என்று எழுத வேண்டியிருக்கிறதே என நினைத்தாலே எனக்கு ஒரு விநோதமாகப்படுகின்றது - அதாவது இந்தியா ஒரு பெரிய நாடு அல்லது இந்துமதம் ஓர் உயர்ந்த மதம் என்று எழுதுவதைப்போல. தமிழ் ஒரு செம்மொழி என்பது தமிழையறிந்தவர்கள் யாவரும் அறிவர். தமிழ் ஒரு செம்மொழியல்ல என்று மறுத்தால் அது இந்தியக் கலாச்சாரத்தின் பெருமையையும் உயர்வையும் மறுக்கும் ஒரு பெருந்தவறு.

ஜார்ஜ் எல். ஹார்ட்
பேராசிரியர் & தமிழ்க்கல்வி அவையுறுப்பினர்



# அன்பென்றாலே அம்மா

மோஷிகா பிரேமதாச

பத்து மாதம் சுமந்து எம்மை
பாரினுக்குத் தந்து விட்ட
பாசமிகு அன்னைக்கு
பா கொண்டு இங்கு வந்தோம்

ஆசையாய் சோறு ஊட்டி
ஆரிராரோ பாடி எம்மை
நேசமுடன் நீ வளர்த்தாய்
தேசக் கலாசாரத்துடன் – தமிழ்
தேசக் கலாசாரத்துடன்

அன்புடனே நீ அணைத்து
ஆதரவு தந்திடுவாய்
பண்புடனே நாம் வாழ
பல கதைகள் சொல்லிடுவாய்

கலை பல பயில வைப்பாய்
துணையாக நீயிருந்து
வெற்றி பல ஈட்ட வைத்து
வியப்பில் நீ மகிழ வைப்பாய்

இறைவனைத் துதிக்க வைப்பாய்
இதயத்தால் உரைச் செய்வாய்
இத்தனை செய்தாய் தாயே
சொத்தாக வாய்த்தாய் நீயே – மாபெரும்
சொத்தாக வாய்த்தாய் நீயே

# தமிழ் அடையாளம்

● நிஷானி கௌரிதாசன்

எழுத்தாளர் விழாவிற்கு வருகை தந்திருக்கும் அனைவருக்கும் எனது பணிவான வணக்கம். எனது பெயர் நிஷானி கௌரிதாசன். நான் சிட்னியில் ஹோம்புஷ் தமிழ்க் கல்வி நிலையத்தில் 11 ஆம் வகுப்பில் தமிழைக் கற்று வருகிறேன். இங்கு நான் எடுத்துக் கொண்ட விடயம் தமிழர் அடையாளம்.

எங்கள் தமிழ் இனத்தின் அடையாளமான தமிழ் மொழியினை புலம் பெயர்ந்த நாடுகளில் பேணப் போகிறோமா? அல்லது தமிழ் மொழி தெரியாத தமிழர்களாக சொந்த அடையாளத்தை தொலைத்த சமூகமாக வாழப் போகிறோமா?

எமது மொழியை தாய் மொழி என்றும், எமது நாட்டைத் தாய் நாடு என்றும் கூறுவோம். தாய் இல்லாமல் நாம் இல்லை. எமது அடையாளாமான தாய் மொழியை மறப்பதும் எமது கலாச்சாரத்தை மறப்பதும் நாம் எமது தாயைத் தொலைப்பதற்கு சமமாகும் அல்லவா?

புலம் பெயர்ந்து வாழும் நாம் ஒருவரை எவ்வாறு அடையாளம் காண்கின்றோம்? அவர் பேசும் மொழியினை அல்லது அவரின் பாரம்பரிய உடையினைக் கொண்டு அடையாளம் காண்கின்றோம். உலகெங்கும் சிதறி வாழும் நாம், வாழும் நாடுகளில் பேசப்படும் மொழியைக் கற்கவேண்டிய நிர்பந்தத்திற்கு ஆகுறோம். ஆனால், எமது உறவினர்களுடன் உறவாட உதவுவது நமது இனிய தமிழாகவே இருக்க முடியும். எமது பண்பாடு, பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், விழுமியங்கள் பேணப்பட மொழி தேவை. எமது தாய் நாட்டில் ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் கூட நாம் எமது அடையாளத்தைப் பாதுகாக்க போராடி வந்துள்ளோம். புலம் பெயர் நாட்டிலுள்ள வாழ்க்கை முறையால் கவரப்பட்டு அந்த வகையில் நாம் வாழ முற்பட்டால் எமது அடையாளத்தை இழக்க நேரிடும். சம்பந்தர் Sam ஆகலாம், சமயத்தில் ராமனும் Raam ஆகலாம். ஆனால் தமிழர் ஆங்கிலேயராக முடியாது. சிலர் தமது அடையாளத்தை மறைத்தும், மறந்தும் இங்கு வாழ்கின்றார்கள். அவர்களுக்கு ஆபத்து வரும்போது “அம்மா” என்றுதான் கத்துவார்களே ஒழிய Mummy என்று கத்தமாட்டார்கள். இந்நிலையில் முதலில் பலியாவது தாய்மொழியும், தமிழ்ப் பண்பாடும் ஆகும். இவ்வாறு நீங்கள் கொலைவெறி, கொலைவெறிதான் என்று எமது தாய்மொழியை பலியாக்க விரும்புகிறீர்களா? இந் நிலைக்கு எவரும் ஆளாகக் கூடாது என்றுதான் எம்மவர்கள் இங்கு தமிழ்ப் பாடசாலைகளையும், நூல் நிலையங்களையும் உருவாக்கி, எமது சந்ததி தமிழையும், பண்பாட்டையும் அறிந்து தமிழர் என்ற பெருமையுடன் தலை நிமிர்ந்து

வாழவேண்டும் என்று செயற்படுகின்றார்கள். மேலும் இங்கு உள்ள தமிழ் ஊடகங்கள் தமிழுக்கும் பெரியோர்களுக்கும் செய்து வரும் சேவையும் பாராட்டத்தக்கது.

கல் தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய மொழி நம் தமிழ் மொழி. மொழி ஓரினத்தின் விழி எனப்படும். தொன்மையான மொழிகளுள் நமது தமிழும் ஒன்று. அது மட்டுமல்ல தொல்காபியத்தைப் பெற்றுள்ள மொழியும் எமது மொழியே. இவ்வாறு பெருந்தொகையான இலக்கியங்களைத் தனது அணிகலன்களாக கொண்ட எமது மொழி இன்று செம்மொழியாக சிறப்புற்றுள்ளது.

நாம் தமிழர் எமது தாய் மொழி தமிழ். எமது அடையாளத்தைப் பேணிக் காப்பது எமது கடமை. தமிழ் நம் அடையாளம் என்று நாம் எல்லோரும் பெருமைப் பட வேண்டும். தமிழ் இல்லாமல் எம்மை இவ்வுலகில் அடையாளப் படுத்தமுடியாது. சீனர்கள், ஆங்கிலேயர் என நாம் மொழியை வைத்தே மக்கள் கூட்டத்தை அடையாளம் காண்கின்றோம். அதுபோல் தமிழ் எமக்கு அடையாளம். இதனால் நாம் எங்களுடைய தமிழ் அடையாளத்தைப் பாதுகாக்க வேண்டும். நாம் தமிழர் என்று உறுதியோடு சொல்ல வேண்டும். அடுத்த சந்ததிக்கு எமது மொழி, பண்பாடு என்பவற்றை தெரிவித்து அவர்களும் தமிழர் என்ற அடையாளத்தைப் பாதுகாக்க வேண்டும்.

தமிழ் வாழ வாழ்கின்ற எழுத்தாழர்களே! உங்கள் உள்ளத்தில் ஊறி எழுகின்ற உணர்ச்சி வெள்ளம், புலம் பெயர்ந்து வாழும் இளம் உள்ளங்களில் தமிழ் உணர்ச்சியை வளர்க்க வேண்டும். எங்கள் தமிழ், எங்கள் உயிர், எங்கள் வாழ்வு, என்று ஒவ்வொரு தமிழனையும் எண்ணச் செய்ய வேண்டும். தமிழை மறந்து, தமிழன் என்ற இன உணர்ச்சியும் இல்லாமல் வாழ்கின்ற கூட்டத்தினரைத் தட்டி எழுப்ப வேண்டும்.

எமது மொழியும், கலாச்சாரமும் எமது பெற்றோர்களுடன் மட்டும் நின்றுவிடக் கூடாது. சந்ததி சந்ததியாக வளரவேண்டும். "தமிழன் என்று சொல்லடா.... தலை நிமிர்ந்து நில்லடா.. "என்ற சொல்லிற்கிணங்க நாம் எல்லோரும் எமது தாய் மொழியான தமிழையும் கலாச்சாரத்தையும் வளர்த்து எமது அடையாளத்தை நிலைநிறுத்துவோம்.

"தேமதுரைத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்."

எனக் கூறி உங்களிடம் இருந்து விடைபெறுகிறேன்.

## தைப்பொங்கல் வரலாறு

**சங்ககாலத்தில் அறுவடை காலத்தில் நல்ல மழை பொழியவும், நாடு செழிக்கவும் பெண்கள் இந்நோன்பைக் கடைப்பிடித்தார்கள். தை முதல் நாளில் இந்த நோன்பை முடிப்பார்கள். நல்ல விளைச்சல் கொடுத்தமைக்காக பூமி, பகலவன், உதவிய கால்நடை, மாடு போன்றவற்றிற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக சர்க்கரைப் பொங்கல் படைத்து வழிபட்டனர். இதுவே நாளடைவில் மூன்று தினங்கள் கொண்டாடும் பொங்கல் திருநாள் கொண்டாட்டமாக மாறியது.**

Source: Wikipedia




சூர்ய புத்திரன்

தொடர்கதை

ரயில் எக்மோரை நெருங்கிக் கொண்டிருந்தது. ஆனந்த் கைக்கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் அதிகாலை 6.10. இன்னும் பதினைந்து நிமிடங்களில் எக்மோரை அடை ந்து விடலாம். முன் வரிசையில் அமர்ந்திருந்து இரவுமுழுவதும் வாய் ஓயாதுபேசிக் கொண்டிருந்த அந்த வயதான தம்பதியர் தூக்கத்தை விரட்ட முயன்று தோற்றுப் போயிருந்தனர். குடிப்பதற்காக வாங்கி வைத்திருந்த குளிர் நீரை கைகளில் ஊற்றி முகத்தில் தெளிக்க சிறிது புத்துணர்ச்சி ஏற்பட்டது. ப்ரிப்கேசைத் திறந்து, லப்டோபிற்கு உயிர் கொடுத்தான். இதுவரையில் நடந்த சம்பவங்களை கோர்வையாக்கி இன்ஸ்பெக்டர் ராமகிருஷ்ணன்கொடுத்த ரிப்போர்ட், இம்போர்டன்ட் என்ற டிரெக்டரி யில் உறங்கிக் கொண்டிருந்தது. அதனை கிளிக் செய்து மீண்டும் ஒருதடவை வாசித்துப் பார்த்தான். ஒரு "க்ளுவும்" தோன்றவில்லை. யன்னலுக்கு வெளியே பார்வையை ஓடவிட்டான். பார்வையிலிருந்து மரங்கள் சிறிது சிறிதாக மறைந்து கட்டடங்கள் தோன்ற ஆரம்பித்திருந்தன. எக்மோர் என்றபெயர்ப்பலகை பெரிதாக மிகப் பெரிதாக ரயிலை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தது.

பிளாட்போர்ம் சத்தங்கள், போர்ட்டர்களின் பேரம் பேசல்கள், காலை உணவு, தேநீர், கோப்பி விற்பவர்களின் குரல்கள்என்று எக்மோர் ரயில் நிலையம் புதியதொரு காலைக்கு தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தது. லப்டோபை ஆப் செய்து தன்னுடைய ப்ரிப்கேசை எடுத்துக் கொண்டு ரயில் நிலையத்தை விட்டு வெளியே வந்தான் ஆனந்த். எதிரே இருந்த கடைஒன்றில் தினத்தந்தி ஒன்றை வாங்கிக்கொண்டு டாக்ஸி ஒன்றுக்காக கையை அசைத்து சிறிது நேரம் காத்திருந்தான்.

"எங்கே சார் போகணும்?". அட்ரெஸ் சொன்னான். டாக்ஸி ஆனந்தை சுமந்து கொண்டு கோடம்பாக்கம் "ஹை ரோடு" வழியாகப்பயணித்து நுங்கம்பாக்கத்தில் எழுந்து நின்ற 'தி ஸ்ப்ரிங்' ஹோட்டல் முன்னால் வந்து நின்றது. பணத்தை செலுத்திவிட்டு ரிஷெப்சனை நெருங்கினான். ஒரு ஆங்கிலோ இந்தியப் பெண் புன்னகைத்தாள். டிவியில் தனுஷின் கொலைவெறி ஓடிக்கொண்டிருந்தது. ரூம் நம்பர் சொன்னான். ரெஜிஸ்டரில் சரி பார்த்துவிட்டு சாவியை எடுத்து நீட்டினாள். மீண்டும் அதே ரெடிமேட் புன்னகை. தேங்க்ஸ் சொல்லிவிட்டு லிப்ட்டை நோக்கி நடந்தான்.

ரூம் நம்பர் 36 ஐ அடைந்து காலை உணவிற்கு ஆர்டர் செய்துவிட்டுக் குளிக்கப் போனான். பயண அலுப்புத்தீரக் குளித்துமுடித்து டிவியை ஆன் செய்தான். வானிலை அறிக்கை பார்த்துக் கொண்டிருக்கும்போது கதவு தட்டப்பட்டது. பணியாள் காலை உணவை வைத்து விட்டுச் சென்றான். சுடச்சுட சப்பாத்தி, உருளைக்கிழங்குக் கூட்டு, பருப்பு சாம்பார், ஆரஞ்சு யூஸ் எல்லாவற்றையும் ஒரு பிடி பிடித்தான்.

இன்ஸ்பெக்டர் நவநீதகிருஷ்ணனுக்கு ஒரு எஸ் எம் எஸ் அனுப்பிவிட்டு படுக்கையில் விழுந்தான். எவ்வளவு நேரம்தூங்கினான் என்று தெரியவில்லை. இண்டர்காம் சிணுங்கியபோது விழிப்பு ஏற்பட்டது. 'ஹலோ' என்றான். மறுமுனையில் ஆங்கிலோ இந்தியப்பெண் கொஞ்சினாள்.

"Hello Mr. Ananth. Mr. Navaneethakrushnan is waiting for you at the reception".

"I will be there in few minutes".

அவசர அவசரமாக லுங்கியிலிருந்து ஜீன்சுக்கு மாறினான். நேரம் பார்த்தான். மதியம் 12.40 ஆகியிருந்தது. மறக்காமல் லப்டோபை எடுத்துக்கொண்டு லிப்டில் பயணித்து ரிஷெப்சனை அடைந்தான். சோபாவில் உட்கார்ந்து டிவி பார்த்துக்கொண்டிருந்த நவநீதக்ருஷ்ணன் ஆனந்தைக் கண்டதும் எழுந்து வந்தார். பார்வையால் அவரை அளந்தான் ஆனந்த். முறுக்கேறிய தேகம், போலீஸ் மீசை. காதோரம் நரை எட்டிப்பார்த்தது. வயது நாற்பத்தைந்து அல்லது ஒன்றிரண்டு அதிகமாக இருக்கலாம். மப்டியில் இருந்தார்.

"ஹலோ ஆனந்த், ஹௌ வாஸ் தி ஜெர்னி?" சிநேகமாகப் புன்னகைத்தார்.



"பைன் சார், நைட் ஜெர்னி வாஸ் நாட் தட் பாட்". ரிஷெப்சனில் சாவியை ஒப்படைத்து விட்டு அவருடன் நடந்தான். "முதலில் எங்க வீட்டில லஞ்ச் எடுப்போம். மஞ்சு ரொம்ப நல்லா சமைப்பா. பை தி வே, நீங்க நான்வெஜ் சாப்பிடுவீங்க இல்ல".

"ஐ ஆம் எ strictly நன் வெஜிடெரியன் "

"நீங்க நம்ம ஜாதி, விதவிதமாக சமைக்கிறதுன்னா மஞ்சு ரொம்பவே பிரியப்படுவா". அவர் தன் மனைவியின் சமையலைப் பற்றிப் பேசும்போது ஆனந்துக்கு நாக்கில் எச்சில் ஊறியது.

ஹோண்டா CVR இற்கு உயிர் கொடுத்து அண்ணாசாலையில் வழுக்கி தன்னுடைய வீட்டு போர்டிகோவில் காரை நிறுத்தினார். வாசலிலே மஞ்சு வரவேற்றார். சாப்பாடு மிகவும் பிரமாதமாக இருந்தது. சிறிது நேரம் மஞ்சுவுடன் பேசிக் கொண்டிருந்துவிட்டு தன்னுடைய பிரத்தியேக அலுவலக அறைக்கு ஆனந்தை அழைத்துச் சென்றார் நவநீத கிருஷ்ணன்.

அறை மிகவும் நேர்த்தியாக இருந்தது. எம். ஜி.ஆர் தனியாகவும் பேரறிஞர் அண்ணாவுடனும் சுவரில் புன்னகைத்துக் கொண்டிருந்தார். மௌனத்தைக் கலைத்தார் நவநீத கிருஷ்ணன்.

"முதலில் கொலை செய்யப்பட்டவர் முத்துராஜப்பிள்ளை. வாக்கிங் போன வரைப் பிணமாகத்தான் கொண்டுவந்தாங்க. இத்தனைக்கும் அவரோட வயசு 72. அப்புறமா அவரோட இரண்டாவது சன் நடராஜபிள்ளை கொலை செய்யப்பட்டிருக்கார்".

"அவங்க குடும்பத்தில எல்லாமா எத்தனை பேர் இருக்காங்க"

"முத்துராஜப்பிள்ளையோட "ஒய்ப்" கனகவல்லி படுத்த படுக்கையா இருக்காங்க. இந்த தம்பதிக்கு மூணு பிள்ளைகள், மூத்தவர் கைலாசபிள்ளை கட்டை பிரமச்சாரி. இரண்டாமவர் நடராஜபிள்ளைக்கு ஒரு பையன், ஒரு பொண்ணு. பையன் பேரு பிரகாஷ், பொண்ணு பேரு காவ்யா. நடராஜபிள்ளை கொலை செய்யப்பட்ட அதிர்ச்சியிலிருந்து அவரோட சம்சாரம் மீனாட்சி இன்னமும் மீளல. அடுத்து ஒரு தங்கை கலையரசி. சுந்தர மூர்த்தியை மேரி பண்ணி அவங்களுக்கு மைதிலி, வாசுகி என்று இரண்டு பசங்க. பிரகாஷ் தான் பிசினஸ் எல்லாம் கவனிக்கிறான். சுந்தரமூர்த்தி துணையாக இருக்கார்…".

நிறுத்தி சற்றே நிதானித்தவர் தொட ர்ந்தார்.

"… ஊரிலேயே ரொம்ப வசதியான குடும்பம். மில், பாக்டரி என்று பெரிய பிசினஸ். ஊர் மக்களும் நிரம்பவே மதிப்பும் மரியாதையும் வைச்சிருக்காங்க."

"பெரிய வீட்டு விவகாரம். சின்னவீடு அப்படி இப்படின்னு எதாவது இருந்து, அதில பிறந்த வாரிசு யாராவது சொத்துக்கு ஆசைப்பட்டு தன்னோட நோக்கம் நிறைவேறாது என்று தெரிந்து இப்படி தொடர் கொலைகளில ஈடுபட சான்ஸ் இருக்கலாம் இல்லியா".

"இருக்கலாம் ஆனந்த். அந்தக் கோணத்திலேயும் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் ".

# கல்விச் சுற்றுலா

தினேஸ் சங்கர்
பாரதிப் பள்ளி மாணவன்
டன்டி னொங் வளாகம்

(அடுத்த இதழில் தொடரும்....)

**நா**ன் சென்ற கல்விச் சுற்றுலா. நான் மெல்பேர்ணில் உள்ள நூதன சாலைக்குச் சென்றேன். அங்கு நூதன சாலை மூன்று வகையாகப் பிரித்திருந்தார்கள். நாங்கள் முதல் போன இடம் விஞ்ஞானம்.

அங்கு நாங்கள் டைனோசரின் எலும்புகள் பார்த்தோம். அந்த எலும்பை வைத்து ஒரு டைனோசரை உருவாக்கி இருந்தனர். அதில் அதன் பற்கள் எல்லாம் இருந்தன. அது எவ்வளவு வருடம் பழையது என்று சொல்லியிருந்தது

அங்கு நாங்கள் பூச்சிகளைப் பார்த்தோம். அங்கு பலவகையான பூச்சிகள் இருந்தன. அங்கு முன்னைய காலத்தில் இருந்து இக்காலம் வரை இருக்கும் பூச்சிகள் வரை இருந்தன. அங்கு அந்தப் பூச்சிகள் எப்படி வளர்கின்றன என்றும் இருந்தன. அங்கு சிலந்தி, பாம்பு எறும்பு மற்றும் பல பூச்சிகள் இருந்தன. நாங்கள் இன்னும் உள்ளே சென்றோம். அங்கு அவுஸ்ரேலியாவில் உள்ள எல்லா மிருகங்களின் பொம்மைகளையும் வைத்து இருந்தனர். அங்கு ஒரு வகையான கணனியையும் வைத்திருந்தனர். அந்தக் கணனியைத் திருப்பி நாங்கள் அந்த மிருகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டுமாயின் அதை அழுத்த வேண்டும். அழுத்தியவுடனேயே அதைப் பற்றிய விடையங்கள் வந்துவிடும்.

பிறகு நாங்கள் மாடிக்குச் சென்றோம். அங்கு விஞ்ஞானிகளின் பூச்சிகளைப் பற்றிய விளக்கம் இருந்தது. அதற்கு அடுத்த அறையில் பண்டைய மம்மிகளும் மம்மிகளைப் பற்றிய விடையங்களும் இருந்தது.

பிறகு மரங்களைப் பற்றி இருந்த பிரிவுக்குச் சென்றோம். அங்கு மரங்கள் எப்படி வளர்கின்றது அவையின் வயதை எப்படிக் குறிக்கலாம் என்று சொல்லி இருந்தது. அங்கு எப்படி மரத்திற்குள் மிருகங்கள் வாழும் என இயற்கையாக காட்டப்பட்டிருந்தது. அங்கு குகை ஒன்று இருந்தது. அந்தக் குகையில் பழங்குடியினரின் படங்கள் இருந்தன. அங்கு ஒரு குளமும் இருந்தது.

மற்றும் நாங்கள் பழங்குடியினரின் பிரிவுக்குச் சென்றோம். அங்கு பல படங்களைப் பார்த்தோம். மற்றைப் பழங்குடியினரின் சரித்திரத்தைப் பற்றி 2013 இல் வருகிறது என இருந்தது. எனவே நாங்கள் மாடிக்குச் சென்றோம். அங்கு பார்-லாப் எனும் குதிரையைப் பற்றி இருந்தது. அந்தக் குதிரை எல்லா குதிரைப் போட்டியிலையும் வெல்லும் என்றிருந்தது. அது அவுஸ்ரேலியாவில் இருந்து அமெரிக்காவுக்குப் போட்டிகுப் போனது அது போட்டியில் வென்று விட்டது. அந்தக் கோபத்தில் யாரோ அதற்கு விசம் வைத்துக் கொன்றுவிட்டார்கள்.

அடுத்து மற்றைய அறையில் பழங்கால புகையிரத வண்டி, தங்கக்கல் ஒன்றும், பழைய பாட்டுப் பாடும் இயந்திரம் ஒன்றும் இருந்தது. நாங்கள் நேரம் ஆகிவிட்டது எனக் கீழே வந்துவிட்டோம். நாங்கள் வந்த உடனே பள்ளியில் இருந்து எல்லாரும் வீட்டுக்கு வந்துவிட்டோம்.

# நேர்காணல்



**அ**வுஸ்திரேலியா விக்ரோறிய மாநிலத்தில் 2012 V..C..E பரீட்சைக்கு தமிழ் மொழியில் தோற்றி தமிழில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களில் சிலரை கேசி தமிழ் மன்றத்தின் இளவேனில் சஞ்சிகைக்காக நேர்காணல் ஒன்றில் சந்தித்து உரையாடினோம். அவர்கள் கற்றதும், பெற்றதுமான அனுபவங்களை எம்மோடு பகிர்ந்து கொண்டார்கள்.

நேர்காணலில் பங்கு கொண்ட மாணவர்கள்: கீர்த்தனா ஜெயரூபன்,சாம்பவி சிங்கராசா, கடாட்சினி ரவிராஜ்

**(1) புலம் பெயர்ந்த நாடான அவுஸ்ரேலியாவுக்கு வந்த பின்பு, தமிழையும் தொடர்ந்து படிக்க வேண்டும் என்று ஏன் எண்ணினீர்கள்.?**

கீர்த்தனா:-

நான் இலங்கையில் இருக்கும் பொழுது தமிழ் படித்தனான். இங்கு வரும்போது தமிழ் பாடசாலை இருக்கும் என்று எண்ணிக் கொண்டு வரவில்லை. அதனால் என் மனதில் கவலை இருந்தது. எனக்குத் தெரிந்த தமிழ் மொழி அழிந்து விடுமோ. நான் மேலும் தமிழ் மொழியைக் கற்க முடியால் போய்விடுமோ என்று. ஆனால் இங்கு வந்ததும் தமிழ் பாடசாலை இருக்கு என்று தெரிந்ததும் மேலும் தமிழ் மொழியைப் பற்றி அறியக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கும் என்றபடியால் தான் தமிழ் படிக்க வேண்டும் நான் என விரும்பினேன்.

**(2) பாடசாலையின் உதவி எவ்வாறு இருந்தது.?**

கட்டாயம்., நான் பாரதி பாடசாலையில் படிக்கும் போது, ஆசிரியர்கள் தமது கடின உழைப்பைக் கொண்டு எங்களுக்கு கற்பித்ததால், நான் இந்தப் பெறு பேறு பெற்றிருக்கிறேன் என்பது உண்மை. அங்கு வந்து நான் எப்படி பரீட்சை எழுதவேணும், எப்படிப் பரீட்சையில் கதைக்கவேணும் என்றெல்லாம் எனக்குச் சொல்லித் தந்தார்கள். பரீட்சைக்கு மேலதிகமாக எப்படி என்ன படிக்க வேண்டும் என்று சொல்லித் தந்தவர்கள்.

(3) சாம்பவி சிங்கராசா

**நீங்கள் ஆங்கிலமொழிமூலம் ஏனைய பாடங்களை பாடசாலையில் கற்கிறீர்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும்தான் தமிழ் கற்கிறீர்கள். இன்று இந்தப் பெறுபேறுகளைப் பெற்றுக் கொள்வதற்கு எவ்வளவு சிரமப் பட்டீர்கள் அல்லது எப்படியான சவால்களைச் சந்தித்தீர்கள்?**

சவால் என்று சொன்னால் தமிழ் முழுதாகப் பேசுவது என்பதே ஒரு சவால்

என்று தான் சொல்ல வேண்டும். ஏன் என்றால் ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் தான முழுக்க முழுக்க தமிழ் கதைக்க முடிகிறது. ஏனென்றால் மற்ற நேரமெல்லாம் மற்றப் பாடங்களுக்காக வகுப்புகளுக்குப் போகும் போது கூட ஆங்கிலத்தில் தான் கதைக்கிறோம்.. தமிழ் நண்பர்களைப் பார்க்கும் போதெல்லாம் ஆங்கிலத்தில் தான் கதைக்கின்றோம். அதுதான் எனக்கு சவாலாக இருந்தது. ஏனென்றால் தமிழில் கதைப்பதும் வாசிப்பதும் எழுதுவதும் பெரிய சவாலாக இருந்தது.

**உண்மைதான், முழுக்க முழுக்க ஆங்கில மயமாக இருக்கும் இடத்திலிருந்து கொண்டு இவ்வளவு திறைமையாக சவால்களைச் சமாளித்து இந்த நிலைக்கு வந்திருக்கிறீர்கள். பாராட்டுக்கள்.**

நன்றி,

கடாட்ஷினி

**நீங்கள் ஈழத்தமிழ் சங்கத்தின் தமிழ் பாடசாலையில் தமிழ் கற்று இந்தப் பெறுபேறுகளைப் பெற்று வந்துள்ளீர்கள். தொடர்ந்து ஈழத் தமிழ்ச் சங்கம் செய்கின்ற செயற்பாடுகளில் அதாவது தமிழ் வளர்க்கின்ற வேலைப்பாடுகளில் உங்களுடைய பங்களிப்பு என்னவாக இருக்கும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?**

ஆம், ஈழத்தமிழ் சங்கம் தமிழை வளர்க்க நிறையப் பாடுபடுகிறார்கள், அந்த வகையில் நான் தமிழை கற்றுக் கொண்டது. போல் தமிழ் வளர்க்க என்னாலான உதவிகளை செய்வேன். முன் பெல்லாம் தமிழ்ப் போட்டிகளில் நான் பங்குபற்றுவதுடன் எனது நண்பர்களையும் பங்குபற்ற வைப்பதோடு ஏனைய போட்டிகளிலும் பங்குகொண்டு அவர்களையும் பங்குபெற ஊக்குவிப்பேன்.

**மெல்லத்தமிழ் இனி சாகும் என்று சொல்லிக் கொண்டிருக்கும் இந்தக்காலத்தில் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்து வரும் நீங்கள் இனியும் தமிழ் வளரும் என்று எப்படி....**

எங்களைப் போன்ற மாணவர்கள் இந்த தமிழ் என்ற ஒரு பாடத்தை தங்களுடை வீ.சீ.ஈ பரீட்சையில் ஒரு பாடமாக தெரிவு செய்வதில் இருந்தே தெரிகிறது இங்கு தமிழ் வளருகின்றது என்று. அடுத்து எங்களை சுற்றியிருக்கின்றவர்கள் இந்த மொழி வளரவேண்டும் என்று பாடுபடுகின்றார்கள். பல தமிழ் சங்கங்கள்,தமிழ் பாடசாலைகள்,வானொலிகள்,ஒரு சில சங்கீத ஆசிரியர்கள் கூடவும் தமிழ் வளர்ப்பதில் பங்களிப்பு செய்வதாக உணரமுடிகின்றது.

உதாரணமாக மாணவர்கள் இங்கு தமிழ் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகளை வைத்து ஊக்குவிக்கின்றார்கள். இப்படியாக இந்த விதத்திலேயே தமிழ் வளரும் என்று நான் நினைக்கிறேன்.

**(4) விக்ரோறிய மாநிலத்தில் கணிசமான அளவு தமிழ் மாணவர்கள் இருக்கின்றார்கள் இவர்களில் அனேகமானோர் தமிழை ஒரு பாடமாக கற்க முன்வருவதில்லை. இதற்கு என்ன காரணமாக இருக்கலாம்?**

முதற்காரணம் பெற்றோர்கள் ஊக்கம் கொடுக்கிறதில்லை. தமிழ் என்ர பிள்ளைக்குத் தெரியும் தானே அது தமிழை எடுத்து என்ன செய்யப் போகுது. அடுத்து ஆங்கில சூழலுக்குள்ளேயே இருப்பது ஒரு முக்கிய காரணம். அத்தோடு இன்னொரு கருத்து என்னவென்றால் தமிழை ஒரு பாடமாக எடுத்தால் வீ.சீ.ஈ க்கு நல்ல புள்ளிகள் கிடைக்காது என்று ஒரு எண்ணம். ஆனால் நீங்கள் நல்ல ஒரு விடா முயற்சி செய்தால் தமிழுக்கு நல்ல புள்ளி எடுக்க முடியும் என்பது அதோடு தமிழ் வளர்ச்சிக்கும் பங்களிக்கலாம். என்பது இன்னமும் விக்ரோறியாவில் இருக்கும் மாணவர்களுக்கு விளங்குகிறதில்லை.

**(5) வீ.சீ.ஈ பரீட்சையின் போது கேள்விகளின் முறைகள், அவற்றின் விளக்கப்பாடுகள், கேள்விகளின் முரண்பாடுகள் என்பன சில மாணவர்களைத் தடுமாற வைக்கும். இப்படியான சந்தர்ப்பங்கள் உங்களுக்கு ஏற்பட்டதா அப்படியாயின் அதனை எப்படி நீங்கள் கையாண்டீர்கள்.**

கீர்த்தனா:-

கடந்தகால பரீட்சைத் தாள்களில் இப்படியான கேள்விகள் வந்தபடியால் நாம் முன்பு அவற்றை ஆசிரியர்களிடமும், பெற்றோர்களிடமும் பயிற்சி எடுத்துக் கற்றிருந்த படியால் எமக்கு இது இலகுவாக இருந்தது. இருந்தும் எனக்கு நேரம் போதவில்லை. பரீட்சை எழுதி முடிந்ததும் ஒரு நிமிடம் தான் இருந்தது. இதனால் எனக்குள் ஒரு பயம் ஏற்பட்டது. நான் சரியாகப் பரீட்சை எழுதவில்லையா அல்லது

எனக்கு என்ன புள்ளிகள் வரப் போகிறது என்று பயம் ஏற்பட்டது. ஆனால் இவற்றை எல்லாம் கடந்து வெற்றி பெற்றிருக்கின்றேன். இன்று இங்கு வந்து பேட்டி தருகின்றேன் என்றால் கடவுளுக்குத் தான் நன்றி சொல்ல வேண்டும்.

சாம்பவி:-

எனக்குச் சில கேள்விகள் புரியாமல் இருந்தது. ஆசிரியர்கள் சொல்லிக் கொடுத்தபடி முன்னுக்கு தெரிந்த கேள்விகளை வாசித்து விடை எழுதி விட்டு பின்பு மற்ற கேள்விகளை எழுதினேன்.

கடாட்சினி:-

சில கேல்விகளுக்கு கூடுதல் புள்ளி என்பதால் விரிவான பதில் எழுத வேண்டும். இதில் பயிற்சி எடுத்திருந்ததால் எனக்கு இலகுவாக இருந்தது.சில கேள்விகள் தடுமாற்றமாக இருந்தது உண்மை தான்

**பல்லினக் கலாச்சாரத்துக்குள் இருக்கும் நாம் எமது சமுதாயத்துக்கு வெளியே எமது அடையாளத்தைக் காட்ட தமிழர்கள் என்ன செய்ய வேண்டும் என நினைக்கிறீர்கள்?**

மிக முக்கியமாக தமிழ்ப் பாடத்தில் சிறந்த புள்ளிகள் எடுக்க வேணும் இப்போ நாங்கள் செய்த மாதிரி. எமது நண்பர்ளுக்கு எமது மொழி பற்றியும் அதன் சிறப்புப் பற்றியும் சொல்லவேண்டும்

நாங்கள் சிறுவயதில் இலங்கையில் இருந்து வந்திருந்தும்இன்றுவரைத்தமிழ்பாடசாலைகளுக்குச் சென்று தமிழைப் படித்து, போட்டிகளில் கலந்து கொண்டு தமிழை ஊக்குவித்து வந்துள்ளோம். அதுபோல் தமிழ் கலாச்சார நிகழ்வுகளில் மற்றைய இனமக்களையும் இணைத்து நிகழ்ச்சிகள் செய்யவேண்டும். முதலில் தமிழர்களுடன் தமிழிலேயே பேசவேண்டும்.

**(7) இரு பாடாசாலைகளின் மூலம் தமிழைக் கற்று சிறந்த பெறுபேறுகளை பெற்றுள்ளீர்கள். ஒரு மாணவன் சிறந்த பெறு பேறுகளை எடுக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டுமென நினைக்கிறீர்கள்.**

ஒரு மாணவன் படிப்பில் சிரமப்படுகின்றான் என்றால் அந்த மாணவன் தனிப்பட்ட முறையில் ஆசிரியரை அணுகி தெரியாத விடையங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். பெற்றோர்கள் ஆசிரியர்களை அணுகி தங்களது பிள்ளைகளின் நிலைப்பாடுகளை அடிக்கடி தெரிந்து கொள்ள வேண்டும். எமது பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் மிகவும் சிறந்தவர்கள், மிகவும் தகுதி வாய்ந்தவர்கள், எல்லோரும் நன்றாகவே கற்பித்தவர்கள். எனினும் ஆசிரியர் பற்றாக்குறை என்றிருந்தால் படித்து நல்ல பெறுபேறுகளை எடுத்த மாணவர்கள் கீழ்வகுப்பு மாணவர்களுக்கு பாடங்களைச் சொல்லிக் கொடுக்க முன்வரலாம்.

**(8) இப்படி விளக்கம் சொன்ன பல மாணவர்கள் பிற்காலத்தில் தாங்கள் கற்ற பாடசாலையையே மறந்து போனார்கள் நீங்களும் அப்படி.......**

அப்படி சொல்லவேண்டாம் நான் சில வகுப்புக்களுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கின்றனான்

நாங்களும் இனி வரும் காலங்களில் பாடசாலைகளில் உதவி செய்வோம்.

**(9) இன்று வளர்ந்து வரும் குழந்தைகளுக்கு தமிழ் கற்றுக் கொள்வதற்கும், தமிழை வளர்த்துக் கொள்வதற்கும் நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்.?**

ஒரு போதும் தமிழ்ப் பாடம் கஸ்ரம் என்று நினைத்து அதைக் கைவிட வேண்டாம். இப்போது அவர்கள் தமிழ் படித்துக் கொண்டிருந்தால் வீ.சீ.ஈ வரையும் அவர்கள் படிக்க வேண்டும் என்று ஊக்குவிக்க வேண்டும்.

இங்கு பல மாணவர்கள் 9 ஆம் வகுப்பிலேயே தமிழ் தேவையில்லை என்று விட்டு விடுகிறார்கள். தமிழைத் தொடர்வது கஸ்ரம் என்கிறார்கள். இது தவறான சிந்தனை. ஏனென்றால் மற்றைய பாடங்களைக் கஸ்ரப்பட்டுப் படித்து இலகுவில் புள்ளிகளை எடுக்க முடியும் என்றால், உங்களுடைய தாய்மொழியில், தமிழையும் அதே விடாமுயற்சியுடன் படித்து இலகுவில் புள்ளிகள் எடுக்க முடியும்.

நான் பெற்றோர்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். பிள்ளைகள் கட்டாயம் தமிழைக் கற்க வேண்டும். தமிழ் பாடம் படிக்க வருகுதில்லை. தமிழ் கதைக்க வருகுதில்லை என்பதை விடுத்து, பிள்ளைகளுக்கு தமிழ் மொழியின் பெருமைகளை உணர்த்தி அவர்களைக் கற்கத் தூண்ட வேண்டும்.

ஒருபோதும் தமிழ் மொழியை வெறுத்துக் கொண்டு தமிழைப் படிக்கக் கூடாது,

இங்கு பெற்றோர்கள் தனது மகனோ,மகளோ வெளிநாட்டில் ஆங்கிலம் கதைக்கிறார்கள் என்று பெருமைப்படுகின்ற பெற்றோர்கள் தான் அதிகம். அவர்கள் தனது மகனோ,மகளோ சுற்றியிருப்பவர்களுடன் தமிழ் கதைக்கிறார்கள் என்று சொல்வதில்லை, பெருமைப்படுவதும் குறைவு.

**(10) விக்ரோறிய மாநிலத்தில் தமிழ் பாடசாலையில் இருக்கின்ற பாடத்திட்டங்கள் மாற்றப்படவேண்டும் அல்லது தற்போதுள்ள முறையில் சில மாற்றங்கள் செய்யப்பட வேண்டும், அல்லது இந்த முறையே சரியானது என்று நினைக்கிறீர்களா?**

இந்தக் கேள்விக்கு உண்மையாகவே எனக்குப் பதில் சொல்ல முடியாது. ஏனென்றால் நான் இங்கு வந்ததில் இருந்து பெரிய வகுப்பில் தான் இருக்கிறேன். அதனால் ஒரே மாதிரியாகத்தான் பாடங்கள் படித்தோம். என்னை வீ.சீ.ஈ க்காகத்தான் ஆயத்தப் படுத்தினார்கள். சின்ன வகுப்புகளுக்கு எப்படிப் படிப்பிக்கிறார்கள் என்று தெரியாது. ஆனால் எனது நண்பர்களின் தம்பி, தங்கைகள் படிக்கும் விதத்திலிருந்து தமிழை இங்கு நல்லவிதமாகத் தான் கற்பிக்கின்றார்கள் என்று விளங்குகிறது.

முக்கியமாக இங்கு தேவையானவற்றைச் சொல்லிக் கொடுக்கின்றார்கள். அதாவது வீ.சீ.ஈ க்காகத்தான் படிப்பிக்கின்றார்கள். ஏனென்றால் இலங்கை, இந்தியாவில் சொல்லிக் கொடுப்பதுபோல இங்கு சொல்லிக் கொடுக்கமுடியாது. ஏனென்றால் சில பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு ஒரு குறிப்பிட்ட வயது வந்ததும் தமிழ் படிப்பிப்பதை நிறுத்துகிறார்கள். 9 ஆம் ஆண்டு வந்ததும் இந்தப் பிள்ளை வீ.சீ.ஈ செய்யத் தேவையில்லை என்று தமிழ் பாடசாலையை விட்டுவிடுகிறார்கள்.

சின்ன வயதில் இருந்து வீ.சீ.ஈ.க்காகத் தயார் செய்து வந்தால், பெற்றோர்ளுக்குத் தெரியும் வீ.சீ.ஈ.க்கு நல்ல புள்ளிகள் வரும் என்று. அதே நேரம் தமிழும் வளரும். என்னைப் பொறுத்தவரை இப்போது சொல்லிக் கொடுக்கும் விதம் நன்றாகவே உள்ளது.

இன்னும் முன்னேற வேண்டும் என்றால் கொஞ்சம் போட்டிகள், பேச்சுப் போட்டிகள், பாடசாலைகளுக்கிடையேயான பல போட்டிகள் போன்றவற்றை நடாத்தி முன்னேற்றலாம்.

**(11) தமிழ் பாடசாலையில் தமிழ் கற்பிக்கும் முறையில் வீ.சீ.ஈ.க்கு தயார்படுத்தல், அதனையே முழுமையாக கவனத்தில் கொண்டு கற்பிக்கிறதாக அறிகிறோம். அந்த மாணவர்கள் தமிழ் பாடசாலையை விட்டு வெளியேறி வரும்போது ஒரு எழுத்தாளனாகவோ,கவிஞனாகவோ அல்லது ஒரு ஆக்க சிந்தனை உள்ளவனாகவோ உருவாகக் கூடிய முறையில் இந்தக் கற்பித்தல் முறையானது அமைந்துள்ளதா?**

கீர்த்தனா

ஆம் தமிழ் பாடசாலைகளை எடுத்துப் பார்த்தால் எங்களுக்கு ஆக்கத்திறன் என்பது என்னமும் வரவில்லை. நாங்கள் இங்கு பிள்ளைகள் தமிழ் கதைக்கத் தெரிந்திருக்கவேண்டும். வீ.சீ.ஈ.க்கு புள்ளிகள் எடுக்க வேண்டும் என்பதில் அதிக கவனம் இருக்கின்றதே தவிர இலங்கை இந்தியாவில் கற்பிப்பது போல கற்பிக்கவில்லை. ஒரு பிள்ளைக்கு தமிழில் ஒரு நாடகங்களை தயார் செய்வது எப்படி என்பது போன்ற பயிற்சிகளைக் கொடுக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அப்படியானால் அவர்களுக்குத் தெரியும் எப்படி நாடக அமைப்பு வருகுது, எப்படி கதை எழுதுவது என்பது தெரியும் அதுகள் எல்லாம் தெரியவேணும் என்று விரும்புறன். இவைகள் எல்லாம் விக்ரோரிய மாணவர்களுக்கு படிப்பிக்கத் தொடங்கவில்லை என நினைக்கிறேன்.

முழுக்க முழுக்க வீ.சீ.ஈ புள்ளிகளை எதிர்பார்த்துப் போய்க்கொண்டிருக்கிறோமே தவிர ஒரு பிள்ளைக்குத் தமிழ் மொழியில் ஆற்றல் வரவேண்டும் கதை, கவிதை,நாடகங்கள்,பாடல்கள் போன்றவற்றை எழுதுகின்ற மேலதிக ஆற்றல் தமிழில் வரவேண்டும் என்ற எண்ணக் கருத்து இன்னமும் வரவில்லை.

(சாம்பவி குறுக்கிடுதல்) நேரம் ஒரு முக்கிய காரணமாக இருக்கலாம் என்று நான் நினைக்கின்றேன்.

(கடாட்சினி குறுக்கிடுதல்) அப்படிச் சொல்ல முடியாது. கீழ்வகுப்பு மாணவர்களுக்கு இப்படியான பயிற்சிகள் கொடுத்து வந்தால் அவர்கள் பெரிய வகுப்புக்களுக்கு வரும் பொழுது அது பெரும் சுமையாக இருக்க முடியாது, நேரப்பிரச்சனையும் வராது எனபது என் கருத்து.

**(12) வீ.சீ.ஈ பரீட்சையில் தமிழ் பாடத்தை ஒரு பாடமாக எடுத்து நல்ல புள்ளிகள் எடுத்துள்ளீர்கள். இன்னமும் கொஞ்சம் ஆசிரியர்களது ஊக்குவிப்பு கூடுதலாக இருந்திருக்கலாம் என்று யாராவது நினைக்கிறீர்களா?**

எமது ஆசிரியர்கள் எவ்வளவோ தங்களது சுமைகளுக்கு மத்தியில் எமக்கு பல விடையங்களை சொல்லித் தந்தார்கள். இன்று இந்தளவு புள்ளிகளை நாங்கள் எடுத்ததற்கு எமது ஆசிரியர்கள் தான் முக்கிய காரணம். இன்று நாங்கள் இந்தப் பேட்டி செய்ய முன்வந்துள்ளோம் என்றால் இது அவர்களது கற்பித்தலுக்கான எடுத்துக்காட்டாகத்தான் இருக்கமுடியும். இந்த நிலைக்கு இன்று நாங்கள் வந்ததற்கு பாரதிபள்ளி வளாகப் பாடசாலை ஆசிரியர்களுக்கும், ஈழத்தமிழ்ச் சங்கத்தின் பாடசாலை ஆசிரியர்களுக்கும் நாங்கள் மிகமிக நன்றி கூறுகின்றோம்.

# மதிப்புக்குரிய தொலைக்காட்சி நிறுவனத்துக்கு...

19, கிளரிண்டா வீதி,
டண்டினொங்,
விக்ரோறியா - 3175
17/2/11.

**மதிப்பிற்குரிய தொலைக்காட்சி நிறுவனத்தினருக்கு,**

வணக்கம்.

எனது பெயர் ரிஷிநாராயணன். நான் எனது பல்கலைக்கழகக் கல்வியை முடித்து விட்டு ஓர் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றில் வேலை செய்வதற்காக தேடித்திரிந்த போது, உங்களது விளம்பரத்தைச் செய்தித் தாளில் பார்த்து இக் கடிதத்தை எழுதுகிறேன்.

நான் சிறுவயதிலிருந்தே தொலைக் காட்சியில் செய்தி வாசிப்பாளராக வர வேண்டும் என ஆசைப்பட்டேன். தினமும் இரவில் எல்லோரும் சாப்பிடும்போது அன்று நடந்ததைச் செய்தியாகக் கூறி அனைவரையும் மகிழ்விப்பேன்.

மற்றும் கீழ்தரப்புப் பாடசாலையிலும் உயர்நிலைப் பாடசாலையிலும் கல்வி கற்கும் பொழுது பாடசாலைத் தொலைக் காட்சியில் செய்தி வாசிப்பாளராகப் பணியாற்றினேன்.

எனக்குப் பேச்சுப் போட்டி என்றால் மிகவும் விருப்பம். சிறுவயதில் இருந்து ஒரு பேச்சுப் போட்டி விடாது பங்கு பற்றி வருகின்றேன். பட்டி மன்றங்களில் கூட பங்கு பற்றிய அனுபவமும் உண்டு. எனக்குப் பேசுதல், செய்தி வாசித்தல் என்றால் மிகவும் விருப்பம்.

உங்கள் நிறுவனத்தில் எனக்கு வேலை கிடைத்தால் நான் என்னையும் எனது திறமையையும் அதற்காக அர்ப்பணிக்கத் தயாராக உள்ளேன். நேரம், நாள் தவறாது வேலைக்கு வருவேன். உங்களது நிறுவனத்தின் பெயர் கெடாது நடந்து கொள்வேன். மேலும் என்னைப் பற்றி ஏதாவது தகவல் அறிய எனது தொலைபேசியில் எனனைத் தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம்:- 97000000

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
ரிஷி

# தைப்பொங்கல்



தைப்பொங்கல், உழவர் திருநாள், தைத்திருநாள் என்றெல்லாம் போற்றப்படுகின்ற இந்நாள் தமிழருடைய புத்தாண்டுப் பிறப்பாகும். பழந்தமிழன் மண்ணுலகெங்கும் வளம் கொழித்து எல்லா நலன்களும் நிறைந்த காலமாகத் தைத்திங்களைக் கண்டான். நெற்கதிர்கள் முற்றித் தலை சாய்ந்து பொன்னொளி வீசி அலையாடித் தவழும். செந்நெல் மணம் தென்றலிலே மிதந்து வரும். எனவே, தைத்திங்கள் முதல் நாளை, மாறிவரும் பருவத் தொகுப்பான ஆண்டின் பிறப்பாக, முதல் நாளாகக் கொண்டான். ஆண்டுப் பிறப்பன்று மண்ணுலகம் வளம் கொழித்து, இன்பம் பிறக்கக் காரணமான வெய்யோனுக்கு நன்றி செலுத்திப் போற்றும் நாள் எனக்கொண்டு பொங்கிப் பொலிந்து மகிழ்ந்தான். அதுவே தைப்பொங்கல் திருநாளாகும்.

கதிரவன் மழையைத் தந்து, மழை ஊட்டும் பயிருக்கு வெப்பம் கொடுத்து, பயிர் வளர ஒளியைத் தந்து, வயிற்றை நிறைய வைப்பதற்கு உணவைத் தந்து எம்மை மகிழ்விக்கத் தூண்டுகிறான்.எனவே, கதிரவனுக்கு நன்றி சொல்வது எம் பண்பாட்டின் தலைசிறந்த கடமைகளில் ஒன்றாகிறது.

நாம் பொங்கலன்று வைகறையில் நீராடி புத்தாடை புனைந்து, கிழக்கு வெளுத்து வர முற்றங்களில் கோலமிட்டு, குலைவாழை நாட்டி, செங்கரும்பு கட்டி, தோரணம் சூழத் தொங்கவிட்டு, மா, பலா, வாழைக்கனிகள் படைத்திருக்க, அடுப்பில் மண்பானை வைத்து, பசும்பால் பொங்கி வழியப் புத்தரிசியிட்டு, “பொங்கலோ பொங்கல்” என்று சொல்லிப் பொங்கி சுற்றம் சூழ நின்று களிக்கின்றோம். இவ்விழா இனிமை கூட்டும், விருந்தோம்பல் சிறக்க வேண்டியதெல்லாம் நிறைந்த இந்நாளே தைப்பொங்கல் நாளாகும். இது இளமை பொங்கும் விழாவின் தொடக்க நாள். உழவர்களின் உழைப்பின் பயன் விளைந்திடும் நாள்.

உழவர் திருநாள் என்று போற்றப்படினும், உழுவோர்க்கு மட்டுமன்றி உழவர்க்கும் சரி மற்றவர்க்கும் சரி, எவ்வகைத் தொழில் புரிபவர்க்கும் சரி, உழைத்து வாழும் மக்களது நன்னாளே தைப்பொங்கல் நாளாகும்.

உலகில் காணப்படும் பல்லின பண்பாட்டு விழாக்களிலே மிகமேன்மையான உயர்ந்த கோட்பாடுகளைக் கொண்ட நாகரிக முதிர்வில் விளைந்த திருநாள் தைப்பொங்கல் திருநாள் என்று காணுவதில் பெருமை கொள்வோமாக.

“தைத்திருநாள் இல்லமெல்லாம்
தளிர்த்திடும் தைப்பொங்கல்”



# பரதநாட்டியம்

ஆருதி குமணன்

**பா**வம், ராகம், தாளம் இவை அனைத்தும் இணைந்து வருவது தான் பரத நாட்டியம். இது பல நூற்றாண்டுகளாக தமிழ் பண்பாட்டில் பங்கேற்கும் ஒரு கலையாகும். முன்னர் தேவதாசிப் பெண்கள் ஆலயங்களிலும் அரச சபைகளிலும் இந்த நடனத்தை ஆடிவந்தார்கள். பின்னர் தமிழர் தம் பாரம்பரியக் கலையாக இவ் நடனக் கலையை வளர்த்து இப்பொழுது புலம் பெயர்ந்து வாழும் இளையோர்களுக்கு இது ஓர் சரித்திரப் புத்தகம் ஆகிவிட்டது. ஆம் இது தமிழரின் வீரம், பெருமை, சரித்திரம் அத்துடன் பண்பாட்டையும் கற்பிக்கும் ஒரு கலை ஆகும். இதன் மூலம் தமிழை மட்டுமின்றி, எமது அன்றாட வாழ்க்கை முறைகளைப் பற்றியும் நாம் அறிய முடியும்.

நான் ஆறு வயதில் இருந்து நடனக் கலையை கற்று வருகிறேன். இக் கலையினுள்ளால் நான் கற்றதும் பெற்றதும் என்னவென்று உங்களுடன் பகிர்ந்து கொள்ள வந்துள்ளேன்.

**பாவம்:-** நாம் சொல்ல வரும் விடையத்தை கதையை சபையினரிடம் புரியும் வகையில் சொல்வதற்காக உதவும் ஒரு உத்தியாகும். நாம் ஆடும் நடனத்தின் கதைகளினால் எமது பண்பாட்டைப் பற்றிய அறிவைக் கூட்ட முடியும். அதாவது நிறைய நடனங்கள் நம்முடைய முதியோர்களின் வாழ்க்கை நடைமுறைகளைப் பயன்படுத்தி இயற்றப்பட்டுள்ளன. உதாரணமாக ஒரு தமிழ்ப் பெண்ணின் குணாதிசயங்களையும் இயற்கைப் பண்புகளையும் பரதநாட்டியத்தினுள்ளாலுணர்ந்து கொண்டேன். பெண்ணாக மட்டுமின்றி ஆணாகவும் அரசர்களாகவும் சிறு குழந்தைகளாகவும் இன்னும் பல பாத்திரங்களாகவும் நடனமாடியுள்ளேன். இவற்றினூடாக என்னால் பல விடையங்களைக் கற்றுக் கொள்ள முடிந்தது. எமது இலக்கியங்கள் அதாவது சிலப்பதிகாரம், இராமாயாணம் போன்றவற்றை மிகவும் அழகான நடன வடிவத்தில் காட்டுபவர்களை நான் அறிவேன். இப்பேர்ப்பட்ட நிகழ்வுகளினூடாக இளையோர்களிடம் தமிழ் இலக்கியங்களைப் பரப்பலாம். சபையோர் மட்டுமல்ல நடனத்தை ஆடுபவரும் அக் கதையை அறிந்து கொள்ள முடியும்.

ஒவ்வொரு கதாபாத்திரத்தையும் முழுதாக ஆழ்ந்து அனுபவித்து ஆடும் பொழுது, ஆடுபவரும் சரி, சபையோரும் சரி அந்தக் கதையை முழுமையாக புரியவும் ரசிக்கவும் முடியும்.

சில மாதங்களுக்கு முன்னர் சிட்னியில் ஒரு நடன நிகழ்வுக்குச் சென்றிருந்தேன். அங்கு "புறநானூறு" என்ற இலக்கியக்கதையை அனைவரும் புரியும் வடிவத்தில் ஆடினார்கள். முன்பு புறநானூறு என்றால் என்னவென்று தெரியாமல் இருந்த நான் இன்று தமிழரின் வீரம் எப்பேர்ப்பட்டது என்று தெரிந்து வைத்துள்ளேன்.

**ராகம்:-** கர்நாடக இசை அல்லது வேறு இசையைப் பரதநாட்டியத்துக்குப் பயன்படுத்துவது வழக்கம். இதனால் நாட்டியக்காரர்கள் நடனத்திற்கு உதவும் என்று சங்கீதத்தைக் கற்றுக் கொள்வார்கள்.

இப்பேர்ப்பட்டவர்கள் தமது பண்பாட்டைச் சேர்ந்த இரண்டு கலைகளைக் கற்பார்கள். இன்றும் நான் சங்கீதம் கற்பதை ஊக்குவிப்பதும் இதுவேயாகும். அது மட்டுமின்றி பாட்டுடன் இணைந்து வாசிக்கப்படும் இசைக் கருவிகளைப் பற்றியும் அறியப் பரதநாட்டியம் உதவுகின்றது.

**தாளம்:-** பரதநாட்டியத்தில் ஜதிகள் கற்றுக் கொள்வது நடனத்துக்கு மட்டுமின்றி, எமது வாழ்க்கையிலும் உதவுகின்றது. பரத நாட்டியம் கற்கும் போது அல்லது ஆடும்போது, நாம் எங்களைக் கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்கிறோம். இது நாட்டியத்தில் மட்டும் அல்ல, வாழ்க்கையிலும் கை கொடுக்கும்.

பரதநாட்டியத்தினால் நான் கற்றதும் பெற்றதும் பல. அவற்றுள் உங்களிடம் பகிர்ந்ததோ சில.

இச் சந்தர்ப்பத்தைக் கொடுத்த அனைவருக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன்.

# விடியலுக்கு இல்லை தூரம்

**மயூரி தர்மகுலசிங்கம்**

கிழக்கு வெளுத்தது கீழ் வானம் சிவந்தது. ஆதவன் தன் ஆயிரம் பொற்கதிர் பரப்பி வானவீதி பவனிவர, ஆனந்தமாக எழுகின்றன புள்ளினம். கீதம் பாடியே கூட்டில் இருந்து வெளியேறின. ஆனால் தூ க்கம் கலைந்தும் புரண்டு படுத்தாள் சரோஜா. அவள் வாழ்க்கைப் பயணத்தின் கடந்த கால நினைவுகள் மட்டும் எழுந்து அவள் மனத்திரையில் பவனி வந்தன.

அன்று தீபாவளி, குளித்து புத்தாடை புனைந்து குடும்பத்துடன் கோயில் தரிசனம் செய்து விட்டு குதூ கலமாக அம்மா,அப்பா, அக்காவுடன் வீடுதிரும்பினாள் சரோஜா. திடீர் என்று எங்கிருந்தோ வந்த செல் துண்டு அம்மாவின் தலையைக் கிழித்து விட்டு எங்கோ சென்றது அம்மா துடிதுடித்துப் பட்டைமரமாகத் தரையில் விழுந்தார்.

அக்காவும், நானும் கதறி அழுதோம். அப்பா எங்களை இழுத்துக் கொண்டு கட்டிடத்துக்கு அடியில் ஓடினார். குற்றுயிராய் இருந்த அம்மாவைக் காப்பாற்ற முடியாமல் அப்பா பட்ட வேதனை இன்னும் என் மனதில் பசுமரத்தாணி போல பதிந்து வலிக்கின்றது.

ரீங்...ரீங் என்ற கடிகாரச் சத்தம் கேட்டு சரோஜா எழுகின்றாள். விழியோரம் வடிந்த கண்ணீரைத் துடைத்து விட்டு காலைக் கடன்கள் முடிக்கின்றாள் சரோஜா.

சுவாமி கும்பிடவந்த சரோஜாவை தாய் தந்தையின் படம் மீண்டும் பழைய நினைவுகளுக்கு இழுக்கிறது.

அம்மாவின் இழப்பைத் தொடர்ந்து அப்பா சோகத்தில் மௌனியாகி நிரந்தர தூக்கத்திற்கு சென்றுவிட்டார். அக்கா என்னைப் படிபதற்காக இரவு பகலாய் அயராது உழைத்தாள். தன் படிப்பைத் தியாகம் செய்தாள். குடும்ப வருமானத்துக்கு கோழி வளர்த்தாள்., உடுப்புத் தைத்தாள்.

இதை அறிந்த அவுஸ்ரேலியாவில் இருந்த மாமா எமக்கு உதவி செய்தார். என்னை அவுஸ்ரேலியாவுக்குக் கூப்பிட்டார். விடியலை நோக்கி வந்த அவுஸ்ரேலிய மண் என்னை குற்றவாளியாகப் பார்த்தது. அகதி என பெயர் சூட்டி கிறிஸ்மஸ் தீவில் அடைத்து வைத்தனர். பல விசாரணையின் பின் விடுதலை தந்தனர். உரிமைக்குப் போராடி மாய்ந்த நம்மவருக்கு நாதியாக அவுஸ்ரேலிய மண் உதவியது. எனக்கு பிரஜா உரிமை தந்து வசதிகள் செய்து வாழ வழிகாட்டியது. ஆனால் தமிழன் எங்கு சென்றாலும் விடியல் காண்பானா? என்ற சந்தேகம் என்னுள் உருவாகத் தொடங்கியது.

வெளியில் குப்பை லொறியின் சத்தம் கேட்டு மீண்டும் நினைவுக்கு வருகின்றாள் சரோஜா.

இன்று அக்காவுக்கு இலங்கையில் திருமணம். ஆனால் இவளால் இலங்கை செல்ல முடியாது. இன்னும் ஒரு வருடம் பொறுத்தாக வேண்டும். கடவுச் சீட்டுப் பெற, அவுஸ்ரேலிய பிரஜாவுரிமை பெற. இது என்ன கொடுமை.

வீட்டுக்கு வெளியே வந்த சரோஜா மீண்டும் உள்ளே ஓடுகின்றாள் குளிர் தாங்க முடியாமல். இன்று மெல்பனில் 9 பாகை குளிர். குளிர் உடுப்பு, தொப்பி போட்ட சரோஜா பஸ்தரிப்பை நோக்கி பகுதி நேர வேலைக்காக ஓடுகின்றாள். பக்கத்து வீட்டு இத்தாலிப் பெண் புன்னகைக்கிறாள். ஆசைக்குக் கூடப் பேச யாரும் இல்லை. புரியாத மொழிகள் பல, வாட்டும் குளிர், கொழுத்தும் வெய்யில், தாயக நினைவுகளின் சுமை, ஏன் இந்த சோகம். நிறைவேறுமா என் ஆசைக் கனவுகள் என்ற பயம் அவளை வாட்டியது. ஆனால் நம்பிக்கையை மட்டும் அவள் இழக்கவில்லை.

அன்று நாங்கள் ஒரு மறக்க முடியாத பயணத்திற்கு புறப்பட்டோம். நானும் என் பள்ளி மாணவர்கள் பதினொரு பேரும் நான்கு ஆசிரியர்களுடன் சிங்கப்பூரிற்கு பயணமானோம்.

எங்கள் பள்ளியின் சகோதர பாடசாலை ஒன்று சிங்கப்பூரில் உள்ளது. அங்கு செல்லும் மாணவர்களில் என்னையும் தெரிவு செய்த போது, என்னால் நம்ப முடியவில்லை. நான் பாடசாலை காம்ப்பில் போயிருந்தாலும், தனியே என் பெற்றோர்களில்லாமல் கடல் கடந்து செல்வது, இது தான் முதல்முறை. இந்த அனுபவம் எனக்கு சந்தோசத்துடன் சிறு பயத்தையும் தந்தது.

ஒன்பது மணி நேர பயணத்தின் பின் சிங்கப்பூரில் உள்ள Changi விமான நிலயத்தை சென்று சேர்ந்தோம். அங்கு போனதும் எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. எல்லாவிடமும் நல்ல துப்புரவாகவும் சுத்தமாகவும் இருந்தது. விமான நிலயத்தில் இருந்து நாங்கள் தங்கவிருந்த விடுதிற்கு செல்லும் வழியில் நெடிது வளர்ந்த மரங்களை பார்த்து பிரமித்தோம். அன்றிரவு YMCA ஹொஸ்டெலில் தங்கினோம்.

# என் சிங்கப்பூர் கல்விச் சுற்றுலா

நித்தியா பத்மசிறி

ஞாயிற்றுக்கிழமை முதல் நாள், நாங்கள் Little India, Kampong Glam, Chinatown போன்ற இடங்களிற்கு சென்றோம். Little Indiaவில் எனக்கு மருதாணி போட்டுவிட்டார்கள். நாங்கள் அம்மி, உரல், தோசைக் கல், இடியப்ப உரல் போன்ற சமைப்பதற்கு பாவிக்கும் பொருள்களை ஓர் இடத்தில் பார்த்தோம். Kampong Glamல் மலாய் கடைகளும் ஒரு பள்ளிவாசலும் பார்த்தோம். பின்னர் நாங்கள் Chinatownற்கு சென்று மதிய உணவை முடித்தோம். மதிய உணவை தெரிவு செய்வது பெரிய கஸ்டமாக இருந்தது. ஏனென்றால், சிங்கப்பூர் உணவு வகைகளுக்கு மிகவும் பிரபல்யமானது. நான் Pao என்ற ஒரு மோதகம் போன்ற உணவை ரசித்து ருசித்து சாப்பிட்டேன். சில பொருட்களையும் எங்கள் குடும்பத்தவர்களுக்கும் அவுஸ்திரேலியாவில் இருக்கும் நண்பர்களுக்கும் வாங்கினோம். அன்று மாலை நாங்கள் சிங்கப்பூர் ஆற்றில் ஒரு படகில் (Bumboat) பயணித்தோம். அது ஒரு இனிமையான அனுபவம்.

திங்கட்கிழமை, Tampines என்ற ஊரில் இருக்கும் எங்கள் சகோதர பாடசாலைக்குச் சென்றோம். நான் கைக்குழந்தையாக Pasir Ris என்ற Tampinesக்கு அடுத்த ஊரில் வசித்ததாக என் பெற்றோர் சொன்னபோது Tampinesக்கு போவதை நினைத்து மகிழ்ந்தேன். எமது சகோதர பாடசாலை தேசிய நாள் கொண்டாட்டங்களில் பங்குபற்றினோம். நாங்கள் சகோதர மாணவர்களுடன் சேர்ந்து படித்தோம். நாங்களும் எங்கள் ஆசிரியர்களும் சிங்கப்பூர் மாணவர்களும்



ஆசிரியர்களுடனும் கல்வி சம்மந்தமான விடயங்களை பகிர்ந்து கொண்டோம். சிங்கப்பூர் மாணவர்கள் மிகவும் கெட்டிக்காராகளாக இருந்ததை பார்த்தோம். அன்றிரவு Singapore Flyer என்று ஒரு Observation Wheelல் சென்றோம். அதில் மிகவும் அழகான சிங்கப்பூர் நகரத்தை பார்த்து இரசித்தோம்.

அடுத்த நாள் ஒன்பதாம் திகதி, செவ்வாய்க் கிழமை, சிங்கப்பூரின் தேசிய நாள். அன்று பல நிறங்களில் வான வேடிக்கைகளும், முப்படைகளின் அணிவகுப்பு, மயிர்க்கூச்செறியும் விமான வீரர்களின் சாகசக் காட்சிகள் என்று பலதை பார்த்து மகிழ்ந்தோம்.



புதன்கிழமை, நாங்கள் மனிதரால் அழகுபடுத்தப்பட்ட Sentosa என்ற தீவிற்கு Monoraill சென்றோம். அங்கு பலவிதமான இயற்கையையும் செயற்கையையும் விபரிக்கும் சிறப்பு அம்சங்களை பார்த்து இரசித்தோம். குறிப்பாக மெழுகினால் உருவமைக்கப்பட்ட பல்கலாச்சாரங்களைப் பிரதிபலிக்கும் திருமணக் காட்சி, பல மீட்டர் உயரமான கடல் சிங்கம் (Merlion) போன்றன எம்மைப் பிரமிக்க வைத்தன.

வியாழக்கிழமை, சகோதர பாடசாலை மாணவி ரியாவின் வீட்டிற்கு போனேன். ரியாவுடனும், அவர் அம்மாவுடனும் இன்னொரு மாணவியுடனும் முதல்முறையாக golf விளையாடினேன். பின்பு நானும் ரியாவும் ஒருவருக்கு ஒருவர் பரிசுகள் பரிமாறினோம்.

வெள்ளிக்கிழமை, கடைசி நாளுக்கு முதல் நாள், நாங்கள் சிங்கப்பூர் மிருகக்காட்சிச் சாலைக்கு சென்று ஓராங்குட்டான்களுடன் (Orangutan) காலை உணவு சாப்பிட்டு விட்டு மற்றும் வேறு மிருகங்களையும் பார்த்தோம். பின்னர் Bugis சந்தியில் உள்ள Bugis சந்தையில் சில பொருட்கள் வாங்கினோம். Bugis சந்தை மிக நவீன ஆடை ஆபரணங்களுக்கு பிரசித்தமானது.

சனிக்கிழமையுடன் எங்கள் பயணம் முடிவிற்கு வந்துவிட்டது. சிங்கப்பூரை விட்டு போவதற்கு மனம் இல்லாமல் இருந்தாலும் இனிய சிங்கப்பூர் அனுபவத்தை சுமந்து கொண்டு வீட்டிற்கு போவதை நினைத்து மகிழ்ச்சியுடன் விமானத்தில் ஏறினேன். Melbourneக்கு வந்ததும் எங்கள் சிங்கப்பூர் பயண அனுபவத்தை எல்லோருடனும் பகிர்ந்துகொண்டோம். எனக்கு மறக்க முடியாத ஒரு பயணம் இந்த சிங்கப்பூர் கல்விச் சுற்றுலா அனுபவம். ஏனென்றால், இந்த பயணத்தில் குட்டித்தீவான சிங்கப்பூரின் பல்லின, பல்கலாச்சார அம்சங்களையும், பல்வகையான உணவு வகைகள், நேர்த்தியும் வசதியுமான போக்குவரத்து (Mass Rapid Transport) மற்றும் சிங்கப்பூரின் வளாச்சி பற்றியும் நான் அறிந்து கொண்டேன். மீண்டும் ஒருமுறை சிங்கப்பூர் போக ஆவலாக இருக்கின்றேன்.

நீங்களும் சிங்கப்பூர் போய் வரலாமே!

# உடல் மனம் வாழ்க்கை

நிர்மலன் சிவா

பிளினி என்ற மேனாட்டறிஞர் கூறுகின்றார், ”மனித இனம் நிம்மதியற்றுத் தவிப்பதன் காரணம் பொருள் மீது மனிதன் கொண்ட ஆதிக்கம் குறைந்து போய், மனிதன் மீது பொருள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கி விட்டதுதான்” என்று.

எந்தப் பொருளாயினும் அது நமக்குத் தேவையா என்பதை ஒருமுறைக்கு இருமுறையாகச் சிந்திக்க வேண்டும். தேவையற்ற பொருட்களை வாங்கிக் குவிப்பதன் மூலம் நமது உழைப்பின் பெரும் பகுதி, நமது சம்பாத்தியத்தின் ஒரு பகுதியாக வீணே வீணாகிறது.

துன்பங்களில் இரண்டு வகை உண்டு. ஒன்று தானே வருவது. இன்னொன்று நாமே தேடிக்கொள்வது. தானே வரும் துயரங்கள் நமக்குச் சோதனை வைக்கும். அது, அதன் மூலம் நம்மை உயர்த்தும். நாமே தேடிக் கொள்ளும் துயரங்கள் அப்படி அல்ல. அவை நம்மை அவமானத்தில் மட்டுமே தள்ளும். அதற்கு உதாரணம், இந்த வகைச் சமாச்சாரங்கள், கீழே வருவது போன்றிருக்கும்.

அறிஞர் பெர்னாட்ஷா ஒரு முறை கூறினார்.

ஒரு பல் பொருள் அங்காடிக்குச் சென்றார். அது மிகவும் பிரமாண்டமான கடை. அதை முழுமையாகச் சுற்றிப் பார்க்கவே இரண்டு மணி நேரம் ஆகும். அதை முழுமையாக வலம் வந்தார் ஷா. ஆனால் அவர் எதுவுமே வாங்காமல் வெளியேறினார்.

கடைக்காரர் கர்வத்துடனும் ஆவலுடனும் கேட்டார்.

”கடையைச் சுற்றிப் பார்த்தீர்களா?”

”பார்த்தேன்” என்றார் ஷா.

”எப்படி உணர்கின்றீர்கள்?” கேட்டார் கடைக்காரர்.

”எனக்குத் தேவையில்லாத பொருட்கள் இந்த உலகத்தில் எவ்வளவு இருக்கின்றன? என்று கண்டு கொண்டேன்” என்று அமைதியாகப் பதிலளித்தார் ஷா.

இங்கு எந்தப் பொருளையும் அவர் குறை சொல்லவில்லை. அவற்றின் விலை பற்றியோ, அல்லது ஆடம்பரம் படாடோபம் பற்றியோ எந்த விமர்சனமும் செய்யவில்லை.

ஒரே வார்த்தையில் ”எனக்குத் தேவையில்லாத பொருட்கள்” என்கிறார். ஆம், இவை தேவைதான். தேவைப்படுபவர்களுக்குத் தேவை. ஆனால் எனக்கல்ல. எவ்வளவு ஆழமாக அவர் சிந்திக்கின்றார்?

இதுதான் தெளிவு. இதுதான் திடமனம். எது தேவை, எது தேவையற்றது என்பதைப் பாகு படுத்தும் ”நுண் மான் நுழை புலம்” அது, இருந்தால் போதும். எம் உடல், மனம், வாழ்க்கை என்கின்ற இவ்வரும் உடைமைகள் எவ்வித மன இறுக்கமோ பதற்றமோ இன்றி சீரான நேர் கோட்டில் வாய்ப்புகளை தன்னைச் சூழ்ந்த செயல் வீரர்களாக்கி வெற்றியின் பாதையில், மகிழ்ச்சியின் தூறலில் நடைபோடத் தொடங்கிவிடும். இவ்வரிய சிந்தனையின் ஆழம் காணாமல் எத்தனையோ அறிஞர்கள் எம் சமகாலத்திலேயே சிக்குண்டிருக்கின்றார்கள்.

காவ்லி என்ற அறிஞர் சொல்கிறார்,

”வறுமை சில பொருட்களை விரும்புகிறது. ஆடம்பரம் பல பொருட்களை விரும்புகிறது. பேராசையோ எல்லாப் பொருட்களையுமே விரும்புகின்றது. பேராசை எதையும் வேண்டாம் என்றே சொல்லுவதில்லை. எல்லாவற்றையும் கொண்டு வா, கொண்டு வா, என்றுதான் அது சொல்லும். அப்படித் தேடித் தேடிக் கொணர்ந்த பல பொருட்களால் நமக்கு எந்த வகையிலும் பயனிருக்காது. நாம் அவற்றை வெறுமனே அடைகாத்து கொண்டிருப்போம், இருக்கின்றோம் என்பதுதான் கசப்பான உண்மை.

ஒரு நாயின் வசம் ஒரு முழுத்தேங்காய் கிடைத்துவிட்டது. அதனால் அதை உடைத்துத் தின்னவே முடியாது. ஆனாலும், அது எவரிடமும் அதனைத் தராது. யாரையும் அது அணுகவும் விடாது. அதனைக் கவ்வியபடியே திரிந்து கொண்டிருக்கும்.

இதே போன்றுதான், நடைமுறையில், அளவுக்கதிகமான ஆசையில், அநீதி முறைகளில் பாவப்பணத்தையும், பொருட்கள், சொத்துக்களையும் சேகரித்து திண்டாடும் அந்த நாயின் உவமானமாகத்தான் நம் முன்னோர் ”நாய் பெற்ற தெங்கம் பழம்” என்கின்றனர். பனம் பழத்தைப் போல் ”தெங்கம் பழம்” என்ற பதம் உவமையாகிறது.

இத்தகைய சுமைகளைத் தவிர்ப்பதே, உடல், மனம், வாழ்க்கை என்று விரியும் வலைப் பின்னலில், எம் உயிர் ஊட்டும் உணர்வுகள் நல் நாட்கள் நம்மோடு இயல்போடும் இயற்கையோடும் தங்க தனது எதிர்பார்ப்பை எமக்கு எடுத்துரைக்கிறது என்றே கொள்ளலாம். அதற்கு மாறாக அமையும் தருணங்கள்தான் மன இறுக்கம், தடுமாற்றம், பதற்றம், தளர்ச்சி.

புராணத்தில் ஒரு கேள்வி வரும். அதற்குப் பதிலும் வரும்.

”மிகுந்த பலசாலி யார்?”

”நோயற்றவன்”

”மிகப் பெரிய பணக்காரன் யார்?”

”கடன் இல்லாதவன்”

எவன் கடன் இல்லாதவனோ, அவனே பெரிய பணக்காரன் என்கிறது, இதிகாசம். எவனால் படுத்ததுமே நிம்மதியாகத் தூங்க முடிகின்றதோ அவனே கடவுளின் அருளைப் பூரணமாகப் பெற்றவன், என்கின்றார்கள் எம் மூதாதையர்கள்.

அமைதியின்மையின் சிம்ம சொப்பனமே நிம்மதி. எங்கே நிம்மதி இருக்கின்றதோ, அங்கே அமைதியின்மை, பதற்றங்கள் நுழைவதற்கு இடமேயில்லை என்பதை விட, அப் பரப்பில் ஒரு சிறு துளை கூட அவைக்கு இல்லை. அத் திடப் பரப்பில் வீணான அலைச்சல்களை மனதில் அர்ச்சனை போட்டு ஓட்டை ஒன்று பெரிதாக எப்பொழுது விழுகிறதோ, ”டென்சன் அரக்கன்” அட்டகாசத்தோடு புகுந்து விடுகின்றான். நிம்மதித் தேவதை, ”இது நமக்குத் தேவையா?” என்றே அவளும் விடைபெற்று விலகி விடுகிறாள்.

தாவரங்களுக்கோ, பறவைகளுக்கோ, விலங்குகளுக்கோ இல்லாத பகுத்தறிவு என்ற ஒன்றை இறைவன் மனிதனுக்கு மட்டும்தான் தந்துள்ளான். அந்த மனத்திலும் எண்ணங்கள் என்ற ஒன்றை அவன் மனிதனுக்கு மட்டும்தான் தந்துள்ளான். அதுகூட ஆச்சரியமல்ல. அந்த எண்ணங்களாலேயே அவன் வெந்து வெந்து சாம்பல் ஆகின்றானே! அதுதான் மிகப் பெரிய அநீதி கலந்த ஆச்சரியம்.

மனிதனின் எண்ணங்கள் அவனுக்கு ஏற்படுத்தும் மன உளைச்சல் பற்றி கவியரசர் கண்ணதாசன் அழகாகச் சொன்ன கவித்துவமான வரிகள் இவை.

மன உளைச்சல் எனப்படும் இந்தச் சொல்லை யாரும் தெரிந்தும் தீண்டிப் பார்ப்பதில்லை. ஆனால், ஆங்கில வார்த்தையில் ”டென்சன்” என்று சொன்னாலே போதும்.

அது ஒவ்வொருவருக்கும் உள்ளே உட்கார்ந்து கொண்டிருக்கும் ஒரு ஒற்றை முள் பந்து என்று அவர்கள் வாய் சொல்லாமலேயே, முகம் சுருங்கி பேசா மொழியாலேயே ”டென்சன்” என்ற பெயர் சொல்லும். சொல்லிக் கொண்டே இருக்கும்.

லாஸ் ஏஞ்சல் நகரில் அரசாங்க மருத்துவ மனையில் பிறந்த நோர்மோ ஜீன் என்ற அந்த அப்பா பெயர் தெரியாத குழந்தையை அவள் தாயார் தூக்கி எறிந்தாள். பின்னர், அவளை வளர்த்த கிரேஸ் என்ற பெண்மணியும் அவளை விரட்டி அடித்தாள். நோர்மோ ஜீனுக்கு விபரம் தெரியாத வயதில் ஜேம்ஸ் டோர்டி என்ற இளைஞனை மணந்த அவள், பரசூட் கம்பனி ஒன்றில் வேலைக்கமர்ந்தாள்.

இரண்டாம் உலகப் போரில் பெண்களின் பங்கு பற்றி விளக்க, அந்தக் கம்பனியால் எடுக்கப்பட்ட புகைப் படத்துக்கான மாடலாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நோர்மோ ஜீனுக்கு அதற்குப் பின் அட்டகாசமான ஏறு முகம்தான்.

அமெரிக்கப் பத்திரிகைகள் அனைத்தையும் அவள் படங்கள் அலங்கரித்தன. ஹாலிவூட் கமராக்கள் அவளது கால் ஷீட்டுக்காக

(வருகைக்காக) காத்திருந்தது. இப் புகழ் நோர்மோ ஜீனை அவளது கணவரிடமிருந்து பிரித்தது. ஹாலிவூட் படங்களால் பணம் கோடானு கோடியாக கொட்ட ஆரம்பித்த நேரம் அது.

ஆனால் அவளால் சந்தோஷமாக இருக்க முடியவில்லை. உலகின் புகழின் உச்சியில் இருந்த அமெரிக்காவின் புகழ் பெற்ற விளையாட்டு வீரரை மணந்து வாழ்வில் மகிழ்ச்சியை அடைய நினைத்தாள். அந்தத் திருமணம் ஓராண்டிலேயே முடிவுக்கு வந்துவிட்டது. கொழு கொழு என்ற குழந்தை ஒன்றுக்கு தாயாக ஆசைப்பட்டாள். கோடானு கோடி ரசிகர்களின் கனவுக் கன்னியாக விளங்கியவருக்கு அது நிறைவேறவே இல்லை. அமெரிக்க ஜனாதிபதி ஜான் கென்னடி முதற்கொண்டு உலகின் செல்வந்தர்களும், பேர் அரசியல்வாதிகளும் நோர்மோ ஜீனின் கடைக்கண் பார்வைக்காகத் தவமிருந்தனர். அவளது படங்கள் உலகம் முழுவதும் வசூலில் சக்கை போடு போட்டன. அவள் சம்பாதித்தது கோடிக்கு மேல் கோடி. அவள் உருவத்தை மார்பின் மேல் பச்சை குத்தி கொண்டலைந்தவர்கள் பலர்.

அறிவாளி ஒருவரையாவது மணந்துகொண்டால், பதற்றமான சந்தோஷ மற்ற வாழ்வில் மாற்றம் ஏதும் நிகழலாமென்ற நப்பாசையில் ”மில்லர்” என்ற எழுத்தாளரை மணந்தாள். அந்த வாழ்வும் அற்ப ஆயுளிலேயே முடிந்த்து.

பணம், புகழ், அந்தஸ்து என எல்லாவற்றையும் தேவைக்கதிகமாகவே பெற்று, மகுடம் சூடாத மகாராணியாக விளங்கிய அவள், எவ்வளவு மகிழ்ச்சியாக வாழ்ந்திருக்க வேண்டும், வாழ்க்கையை அனுபவித்திருக்க வேண்டும். அவள் வாழ்க்கை ஏன் இப்படி சோகத்தில் முடிந்தது? அதற்கு என்னதான் காரணம்? மன இறுக்கம். பதற்றம் நிறைந்த மனத்தளர்ச்சி. ஆதலால் தோல்வி. ஆனால் தனது நட்பை யாசித்து நச்சரிக்கும் வசதியானவர்கள், செல்வாக்கானவர்கள், இவர்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளிய அவளது மனம், விரும்பியது தூய்மையான அன்பை. ஆனால், அது அவளுக்கு மறுக்கப்பட்டுக் கொண்டே வந்தது. அதனால் மனமுடைந்துபோய் போதை மாத்திரைகளின் உதவியால் நிம்மதி காண முனைந்தாள். கடைசியில் அளவுக்கதிகமான தூ க்க மாத்திரைகளை உண்டு, தன் வாழ்க்கையை முடித்துக்கொண்டாள்.

அந்த நோர்மோ ஜீன் வேறு யாருமல்ல. சென்ற நூற்றாண்டின் இணையில்லா கவர்ச்சி நட்சத்திரம் ”மார்லின் மன்றோ” அவளது மரணத்துக்குப் பிறகுதான் கோடீசுவர வாழ்வு என்பது ஒரு மலர்ப் படுக்கை அல்ல, என்பதும் அதற்கு இன்னொரு கோர முகமும் உண்டு என்பதும் பொதுவாகவே உலகத்துக்கு தெரிய வந்தது.

வீரியம் மிகுந்த தூக்க மாத்திரைகளை மருத்துவரின் பரிந்துரை இன்றி விற்கக் கூடாது என்ற கடுமையான சட்டம் உலகில் அமுல் படுத்தப்பட்டதும் அதற்குப் பிறகுதான்.

இன்று மனவியல் நிபுணர்கள் உலக நகரங்களிலும், கிராமங்களிலும் தெருவிற்கு ஒருவர் உண்டு. இத்துறையில் பிரபலமானவர்கள் நோயாளியைப் பரிசோதிப்பதற்கு வாங்கும் தொகை மிகவும் மேலானது. ஆனாலும், அவர்கள் நோயாளியை கவனிப்பதற்கு பல மாத இடை வெளிக்குப் பின்னரே தங்கள் நேரத்தை ஒதுக்கித் தருகின்றார்கள்.

இந்த அளவிற்கு மனிதனைப் பயமுறுத்தும் இந்த மன இறுக்கம் அல்லது மன உளைச்சல் எப்படி ஏற்படுகின்றது? எதனால் ஏற்படுகின்றது? இதற்கான காரணங்கள் என்று உளவியல் மருத்துவர்கள் கருதுவது எவற்றை?

மார்லின் மன்றோ தொடக்கம் எல்விஸ் பிறிஸ்லி, மைக்கல் ஜார்க்சன் என்று தொடரும் இந்தப் பிரபலங்கள் மாத்திரம் அல்ல சராசரி வருமானம் கொண்டு பிழைக்கும் நடுத்தர குடும்ப வர்க்கத்தினரையும் இம் மன இறுக்கம் விட்டு வைத்ததாக பெரும்பாலும் சம்பவங்களே இல்லை. இதில் மாபெரும் வேடிக்கை என்னவென்றால், இன்று மேலை நாடுகளில் பல நிபுணர்கள் பலவகையான ஆய்வுகளை மேற்கொண்டு கண்டு பிடித்த பல உண்மைகள் நமது முன்னோர்களால் முன்பே சுட்டிக் காட்டப்பட்டவைதான். நம் முன்னோர் சுட்டிக் காட்டிய உண்மைகள், மேலை நாட்டவர் விவரித்தைக் காட்டிலும் அற்புதமாக நம் உலக வாழ்வுடன் பொருந்தவும் செய்கின்றன. உலகில் சுய முன்னேற்றம், மன வலிமை, எண்ணங்கள் இவை பற்றி இன்றும் ஏராளமான நூல்கள் வெளிவந்த வண்ணமே உள்ளன.

மேலை நாடுகளில் டாக்டர் காஃப் மேயர், டேல் கார்னகி, நார்மன் வின்செண்ட் ஃபீல் போன்ற பலர் இம்மாதிரி நூல்களை எழுதி உள்ளனர்.

நம்மிலும் டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி, அப்துல் ரஹீம் போன்ற பலர் எழுதி இருக்கின்றார்கள். இவர்களுக்கு நூறாண்டுகளுக்கு முன்னதாகவே சுவாமி விவேகானந்தர் ஓ! இந்திய இளைஞனே! என்று பாரத நாட்டோடு சேர்த்து நம் தமிழரையும் தட்டி எழுப்பி இருக்கின்றார். இந்திய தேசத்தின் ஒட்டு மொத்த இறுக்கத்தையே நாக்கி புது இரத்தம் பாய்ச்சினார். இதில் ஜே.கே என அழைக்கப்படும் ஜிட்டு கிருஷ்ணமூர்த்திக்கும் பெரும் பங்குண்டு.

மேற்கூறிய இவர்களில் யாருமே உடம்பைப் பற்றிக் கவலைப் படவில்லை. உணவை அல்லது உடையைப் பற்றியும் அவ்வளவாகச் சிந்திக்கவில்லை. ஆனால் மனம் பற்றி கவலைப்பட்டார்கள்.

ஒருவனது வாழ்க்கை முறை எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஒருவனின் உடலமைப்பு எப்படி வேண்டுமானாலும் மாறுபடலாம். அது பருத்ததாக, ஒல்லியானதாக இருக்கலாம். நோஞ்சல் தன்மை வாய்ந்ததாக அமையலாம். இரும்பைப்போல் உறுதியாக நிறையலாம். அவன் உண்ணும் உணவு எதுவாகவும் இருக்கலாம். சைவமாக, அசைவமாக, ஆடம்பரமானதாக அல்லது எளிமை ஆனதாகவும் இருந்துகொள்ளலாம்.

ஒருவனது வாழ்க்கையில், சுழற்சியில் வருமானமும் கூட எப்படி வேண்டுமானாலும் வந்து போகலாம். அவன் பணக்காரனாக, பரம ஏழையாக, வருமானம் பல கோடிகளாக அல்லது ஒரு வேளை உணவுக்கே வழியில்லை என்ற நிலையில் கூட மாற்றங்கள் சூழலாம்.

ஆனால் கேள்வி! அவன் மனம் எப்படி இருக்கிறது? அதுதான் நாம் மேற்கண்ட அறிஞர்கள் கவலைப்பட்ட விடயம். அது பள பளப்பாக புத்தம் புதிய பொலிவுடன் இருக்கிறதா? அல்லது செல்லரித்துப் போய் சீர் அழிகிறதா?

ஒருவனது உடல், உணவு, உடை, வாழ்வு, வருமானம் எல்லாம் சிறப்பாக இருந்து அவன் மனம் மட்டும் விழுந்து விட்ட தென்றால், இவை அனைத்தும் இருந்தும் அவனுக்கு என்னதான் பயன்? செல்வமோ, ஆரோக்கியமோ மற்ற எதுவுமோ இல்லை என்றாலும் கூட அவன் மனம் மட்டும் உறுதியாக இருக்கிற தென்றால் அவனுக்கு வேறு எதுவுமே தேவை இல்லை. அவனது மனம் அவனுக்குத் தேவையான அனைத்தையும் அவன் வாழ்நாள் முழுவதும் தரும். அது நம்பிக்கையுடன் நடக்கும் எதிர்பார்ப்பு.

மன இறுக்கம் என்ற இந்த ஒன்றை ஒருவன் அனுபவிக்காத வரையிலும் அதைப்பற்றி என்னதான் விபரித்தாலும், அவனால் அதைப்பற்றி விளங்கிக் கொள்ளவே முடியாது. அதே சமயம், அம் மன இறுக்கம் அவன் மனதில் புகுந்துவிட்டால், அதன் பிறகு அவனுக்கு வேறு எதுவுமே புலப்படாது. ஒட்டு மொத்த மனதையும் ஆக்கிரமித்து, அடியோடு செயலற்றுப்போக வைக்க அதனால் இயலும். நல் நம்பிக்கைகளை நம் மனம் இழப்பது, மரம் தன் வேரை இழப்பதுபோல் ஆகும். விஞ்ஞானமும் வசதிகளும் பெருக பெருக பதற்றம், இறுக்கம், படபடப்பு மனத்தளர்வால் கூடிக்கொண்டே போகின்றன. ஈமெயில், இன்டர்நெட் என உலகம் குறுகிக்கொண்டே போகின்றது. அதே சமயம் மனித மனங்களின் இடையே உள்ள இடை வெளியானது அதிகரித்துக்கொண்டே செல்கின்றது.

பரஸ்பர சந்தேகம், பயம், அவநம்பிக்கை, நிம்மதியின்மை போன்றவைகளும் பெருகிக் கொண்டே செல்கின்றன. கனிவான உச்சரிப்பைக் காசு கொடுத்துப் பெறும் அவலம் ஏற்பட்டுள்ளது.

விஞ்ஞானத்தின் வசதிகள் ஒரு புறமிருக்க விஞ்ஞானத்தால் ஏற்படும் ஆபத்து, அவல நிலைகள் மறு புறம் மனிதனை வாட்டிக் கொண்டிருக்கின்றது. இதையும் அந்த விஞ்ஞானமே கவலையுடன் ஆராய்வதே வேடிக்கைக்குரியதாகிறது.

வசதிகள் பெருகப் பெருக மனிதனின் உழைப்பானது, அதாவது உடல் உழைப்பானது குறைந்து அரும் பெரும் மூளைக்கும், கைகளுக்கும், காதுகளுக்கும் தொழில் நுட்ப கருவிகள் ஊடுருவி இயற்கைச் சூழ்நிலைகளுக் கெதிரான செயற்கை வாழ்வோட்டத்தை தலைமேல் வைக்கின்றன. மனித மனம் பணம் திரட்டுவதொன்றையே நாடுகின்றது. உடல் முற்றிலும் சோம்பியிருக்கும் நிலையில், மனம் நாள் முழுவதும் கண்டதையும் சிந்தித்து, நல்ல சிந்தனைகள் யாவும் அற்றுப்

போய் கண்ட சிந்தனைகள் காரிருள் கூட்டமாய் சூழ்வதால் கடைசியில் தவிர்க்க முடியாதபடி வந்து சேர்கின்றது இம்மனஇறுக்கம்,

உடல், மனம், வாழ்க்கை என்பனவே ஒட்டு மொத்தமாக ஒடுங்கிப் போகின்றன. அது மட்டுமல்ல, அன்பான, பண்பான உணர்ச்சிகளும்தான்.

இதில் வேடிக்கை என்னவென்றால், இன்று மேலை நாட்டு விஞ்ஞானிகள் ஆரய்ந்து சொல்வதை நமது முன்னோர் பற்பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கண்டறிந்துள்ளார்கள் என்பதுதான் ஆச்சரியம். அவர்கள் இதற்கு டென்சன் என்று பெயர் சூட்டவில்லையே தவிர இதை மனப்பாரம், மனஇறுக்கம், மனவெறுமை எனப் பலவகைகளாகப் பிரித்துள்ளனர்.

குடும்பக் கவலைகளால் ஏற்படுவது மனச்சுமை. உழைப்பு, வேலை இவற்றால் ஏற்படுவது மனப்பாரம்.தொடர் பிரச்சனைகளால் மன இறுக்கம். வெளியே சொல்ல முடியாமல் உள்ளே குமைந்து மன அழுத்தம், இழப்பு, ஏமாற்றம், இயலாமை இவற்றால் மன வெறுமை இப்படி ஆராய்ந்தவர்கள் அதற்குப் பல மாற்றுக்களையும் கண்டறிந்தனர்.

தனிமையைத் தவிருங்கள், மனம் விட்டு ஒத்தவர்களோடு பேசுங்கள். நகைச்சுவை உணர்வாளர்களோடு வாய் விட்டுச் சிரியுங்கள் என்றெல்லாம் மேலை நாட்டு அறிஞர்கள் கூறியதுபோல் அவர்களும் கூறி அதற்கு ஒருபடி மேலாக இவற்றுடன் இசையையும் கலையையும் ஒரு மருந்தாக சிபாரிசு செய்துள்ளனர்.

ஆம் இவ்வரும் உண்மையை விஞ்ஞானிகள் சோதனை செய்து பார்த்து இது உண்மைதான் என்று வியப்புடன் அங்கீகரித்துள்ளார்கள்.

நாம் வெவ்வேறு நாடுகளில் பெயர்ந்து குடியமர்ந்து விட்டாலும், நாங்கள் வாழ்ந்த பழைய வாழ்வின் நினைவு விம்பங்கள் என்றும் மனதில் பசு மரத்தாணியாக ஒவ்வொருவர் உள்ளங்களிலும் ஊன்றிப்போனவை.

எங்கள் ஊர் நடுவே கோயில்கள் இருக்கும். வருடா வருடம் பொழுதுகளில் திருவிழாக்கள், ஆறு கால, எட்டு காலப் பூஜைகள், அதற்கேற்றாற்போல் ராகங்கள் வாசிக்கப்பட்டு அவை ஊர் முழுக்க சீராக மணி ஓசைகளோடு காற்றில் பரவும். காலை மாலை வீதி உலா சேர மக்கள் கூட்டம் ஊர்ந்து நகர்ந்து ஊர்வலம் வரும். அதனால் சுற்றுப்புறச் சூழல்களிலேயே அங்கு வாழ்ந்த மக்களுக்கு மனஇறுக்கம் என்றால் என்ன வென்றே தெரியாத அளவு சாந்தம் பொங்கி இயல்பாகவே மனம் இன்பத்தில் நிரம்பி வழியும். சித்தத்தை திடப்படுத்தும் இத்தகு சக்திகள் இவ்வழியில்த்தான் ஊற்றாகின்றன.

அதிகாலை எழுதல், குளிர் நீரில் குளித்தல், வீதி உலா என்ற மெல்லிய நடைப்பயிற்சி, இனிய இசை, இனிய பாடல், பொதுவாகவே இயல் இசை நாடகம் இவையெல்லாம் மன அழுத்த எண்ணங்களை விரட்டி மனதை இலேசாக்கி மனம் கொண்டாடும் மாஅரும் மருத்துவர்கள். அன்றாட அலுவல்கட்கு இவை தங்கு தடைகள் இல்லாமல் அதன் போக்கில் நகர வழி வகுக்கும். பல தரப்பட்ட நண்பர்களோடு உறவுப் பாலங்கள் அமைத்திட அடி சமைக்கும். வாழ்க்கை இனிமையாக்க் கழியும். உடலும் மனமும் உங்களை உவகையால் குளிப்பாட்டும்.

இந்நாட்டுச் சூழ்நிலையில் நமக்கு இந்த வாய்ப்புகள் அரிதுதான். இருந்தும் பொன் வைத்துப் பூஜிக்கும் தட்டில், நறுமண மலர்களை தூவி அர்ச்சித்து பார்த்தாற் போல் கேசி தமிழ்ச் சங்கமும், அதை ஒத்த இதர சகோதர சங்கங்களும் நடாத்தும் இவ் ஆடிப் பிறப்பு விழா போன்று, ஏனைய நல் விழாக்களும், நிகழ்ச்சிகளும், ஒன்று கூடல்களுமே எமது உடலுக்கு உற்சாகத்தையும் மனதுக்கு மகிழ்ச்சியையும் ஊட்டி எம் இனிதான வீட்டிற்கும் நாட்டிற்கும் நல் வழி காட்டுகின்றது.

ஒவ்வொரு மனிதனுள்ளும், ஓர் ஆலம் விதை அறிவு உருவில் விருட்சமாவதற்கு விதைக்கப் பட்டிருக்கிறது. அதை பக்குவமாக வளர்த்தெடுப்பவன்தான் விசாலப் பந்தல் படைக்க இருக்கின்றான்.

வித்துவச் செருக்கிலும் பக்குவப்பட்ட மனிதனே பாரதி போல் தமிழ் கூறும் நல்லுலகில் இன்றும் விரல் விட்டு எண்ணினாற்போல் நிலைத்து நிற்கின்றான்.

ஆண்டவன் அருள் செய்து வழங்கப் பெற்ற எம்முடல், உயிர், மனம் என்பவற்றை நன்றே கட்டிக் காத்து நன்றான வாழ்க்கையை வாழ்ந்து அனுபவித்து மகிழ்வோம்.

*நன்றிகள். வணக்கங்கள்.*

# நான் சென்ற சுற்றுலா *எவ்வாறு* என்னை மாற்றியது

● சாம்பவி சிங்கராசா

கடந்த வருடம் நான் ஆபிரிக்காவுக்கு எனது நண்பர்களுடன் சுற்றுலாச் சென்றிருந்தேன். அங்கு ஜோன் என்னும் பதினாறு வயதுச் சிறுவனுடன் தங்கி இருந்தோம். நாங்கள் ஆபிரிக்காக் கண்டத்திற்குச் சென்றபோது அங்கிருக்கும் இயற்கை, மக்கள், மற்றும் மிருகங்கள் பற்றி எண்ணிக் கொண்டு மட்டுமே சென்றோம். அங்கே நிம்மதியாக எங்களது விடுமுறை நாட்களைச் செலவழிக்கச் சென்ற நாங்கள் திரும்பி வரும் போது போராட்டத்துக்குத் தயாராக வந்தோம். அந்த அளவிற்கு அங்கு நடந்த சம்பவங்கள் எங்கள் மனதை ஆழமாகத் தாக்கியிருந்தது.

நாங்கள் அங்கு சென்ற அடுத்த நொடியே அங்கிருந்த பெரியோர் முதல் சிறுவர் வரை முகத்தில் கள்ளம் கபடம் இல்லாச் சிரிப்புடன் எங்களை வரவேற்றார்கள். நாங்கள் சந்தோசத்துடன் அந்தச் சிறுவர்கள் காட்டிய பாதைகளில் சென்றோம். அந்தக் குடிமக்கள் எங்களை மிகவும் நன்றாகத் தங்களில் ஒருவராக மதித்து விருந்தோம்பினார்கள். சென்ற இரு நாட்களாக ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் எனக் குதூகலமாகத்தான் இருந்தது.

ஆனால் அங்கிருந்த சிறுவன் மட்டும், முகத்தில் கவலையுடன் வறண்டுபோய்த் தென்பட்டான். நானும் எனது நண்பர்களும் அவனிடம் சென்று அவனின் கவலைக்கான காரணத்தை விசாரித்தோம். அப்போது அவன் நாங்கள் வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் தான் தன் அண்ணாவை அந்த நாட்டுக் கலகக் காரர்கள் பிடித்து அவன் கண் முன்னேயே கழுத்தை அறுத்ததாகக் கூறி கண்ணீர் விட்டான். அதைக் கேட்ட எங்களுக்கு ஒரு நிமிடம் உடல் அதிர்ந்தது. எதுவும் புரியாது கடும் குழப்பத்தில் இருந்தோம் யார் அந்தக் கலகக் காரர்கள். எதற்காக அவர்கள் சிறுவர்களின் கழுத்தை அறுக்க வேண்டும்?

அச்சிறுவனைச் சமாளித்தவாறே இக் கேள்விகளை அவனிடம் வினாவினோம். அவன் அவர்களது பிரச்சனையைக் கூற ஆரம்பித்தான். அப்போதுதான் எங்களுக்கு அந்தக் குடிமக்கள் யார் என்பதே தெரியவந்தது. அங்கிருந்த ஒவ்வொருவரும் கலகக் காரர்களிடமிருந்து தப்பி ஓடி வந்தவர்கள். அங்கிருந்த ஒவ்வொரு உயிரும் தங்களளையும் உறவினர்களையும் காப்பாற்றிக் கொள்ளத் தினம் தினம் போராடிக் கொண்டிருக்கின்றார்கள் என்பது தெரியவந்தது. ஒவ்வொருத்தர் பின்னாலும் ஒரு சோகக்கதை இருந்தது. இந்த நிலையில் கூட அவர்கள் என்றைக்காவது ஒருநாள் நிம்மதி தேடி வரும் எனும் நம்பிக்கையுடன் வாழ்ந்து வருகின்றார்கள்.

ஆனால் ஏன் அவர்களுக்கு அப்படி ஒரு நிலமை? சொந்த நாட்டிலேயே ஏன் அவர்கள் இப்படி ஓடி ஒளிய வேண்டும்?.

இதற்கெல்லாம் காரணம் அந்த அரக்க குணத்துடன் வாழும் கலகக் காரரேதான். அந்த நாட்டுச் சிறுவர்களைப் பலவந்தமாகப் பெற்றோரிடம் இருந்து பிரித்து, அடிமைகளாகவோ, சிறுவர்கள் கையில் ஆயுதம் கொடுத்தோ, அல்லது அவர்களைக் கொடுமைப் படுத்திக் கொன்றோ, வாழ்ந்து வருகின்றார்கள். சில சிறுவர்களைக் கட்டாயப்

படுத்தி அவர்களது பெற்றோர்களையே கொலை செய்யவும் செய்துள்ளார்கள். இவ்வாறான பல்வேறு கொடுமைகளில் இருந்து தப்பி ஓடி வந்தவர்களில் சிலரைத்தான் நான் எனது விடுமுறையின் போது சந்தித்தேன்

அவர்களது கதைகளைக் கேட்ட நாங்கள் ஏதாவது உதவியைச் செய்ய வேண்டி எண்ணி, எங்களால் முடிந்த உதவியை உங்களுக்குச் செய்வோம் என அச் சிறுவனுக்கு வாக்கு அளித்து விட்டு வீடு திரும்பினோம். அன்று முதல் இன்றுவரை நானும் எனது நபர்களும் அந்தக் கலகக் காரக் கூட்டத்தைத் தடுப்பதற்காக முயற்சி செய்து வருகின்றோம். போராட்டங்கள், நாட்டுத்தலைவர்களிடம் முறையிடுதல், எனப் பலவற்றைச் செய்கின்றோம். உங்களுக்கும் அந்த மக்களுக்கு உதவ எண்ணம் இருந்தால் தயங்காது முன்வருமாறு அந்தச் சிறுவர்கள் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்.

“நான் ஆபிரிக்காவுக்குச் சென்ற சுற்றுலா எனது வாழ்க்கையையே மாற்றி உள்ளது.”

# செந்தமிழ் படி...

ஆவூரான்

செந்தமிழ் படி
சின்னப்பிள்ளை–உன்
நாவினில் செந்தமிழ்
சொல்லத் தடக்கின்றதா

அன்னைத் தமிழை
அள்ளி எடுத்து
அமுதாய் ஊட்டிட வா

பிறமொழி பேசும்
தேசமடி பிறப்பால்–நீ
தமிழ் பிள்ளையடி
தமிழ் பால் அருந்தி
வளர்ந்திடடி உனை
ஒருக்கால் உலகம்
போற்றுமடி–திரு
வள்ளுவன் தந்த
குறள் பாலும்
கம்பன் எழுதிய
கவிப் பாலும்
கடலாய் உள்ளது
வெண்பாலும்

கற்றிட கற்றிட
இனிப்பாகும்
கங்காரு தேசத்தில்
தமிழ் வளர்ப்போம்
கற்றவர் யாவரும்
ஒன்றிணைவோம்
மற்றவரும் கற்றிட
வழி சமைப்போம்
மறவாமல் தமிழராய்
நாம் நடப்போம்.

